உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் பாடல்களில் சைவ சமயாச்சாரியர் நால்வர் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும்






ஆசிரியர்:

சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** எம்.ஏ., பி.எச்.டி.

உ
திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் பாடல்களில் சைவ சமயாச்சாரியர் நால்வர்

# வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும்




ஆசிரியர்

**சித்தாந்த சரபம், சித்தாந்த கலாநிதி, சித்தாந்த செம்மணி, சித்தாந்த வித்தகி, சித்தாந்த சாகரம், சித்தாந்த சேயிழை**

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பி.எச்.டி.

மேனாள் பேராசிரியர், சைவ சித்தாந்தத் துறை

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்



**மஹா தேஜோ மண்டல சபை (15/88)**

அனுமதி பெற்றது.

நூல் வெளியிடுவோர்

**கீதா இராஜ மஹேந்திரன்,** B.Com., M.B.A.,

**Indian Oil Star Gas Distributor**

**கல்பனா மஹாதேவன்,** B.E.,

**மஹாதேவன் சதாநந்தன்,** B.E., M.S (U.S.A.)

**விஷ்ணு பிரியா கார்த்திகேயன்,** M.C.A.,

**கார்த்திகேயன் சதாநந்தன்,** B.E., Q.L.A.S.Q.S. (U.K.)

**Computer Software Specialists, U.S.A.**

முதற்பதிப்பு : மார்ச் 2013

**நூல் அர்ப்பணிப்பு**

இந்நூல் 7.5.2008 தேதியில் தமது 49வயது வயதில் முருகப் பெருமான் திருவடி அடைந்த நாவீரன் **ப. இராஜமஹேந்திரன்** அவர்களுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. அரிமா சங்கத்தின் ஆளுநராகவும், இந்தியன் எண்ணெய் நிறுவன சமையல் வாயு சிறப்பு (Star) விநியோகஸ்தராகவும், சென்னை உயர்நீதிமன்ற மாண்பமை நீதியரசர் திரு. சிங்காரவேலு அவர்களிடம் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் 'நாவீரன்' என்ற பட்டத்தைப் பெற்றவராகவும், பாம்பன் சுவாமிகளிடம் தூய பக்தி கொண்டு அவருடைய புகழைப் பரப்புபவராகவும் விளங்கினார்.

நூல் கிடைக்குமிடம் :

1. சைவத் திருமுறைச் செம்மல்
   பாம்பனார்-வாரியார் அடிப்பொடி
   **செ.வே. சதாநந்தன்**
   Chief Refinery Co-ordinator (Retd.) Indian Oil
   தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம் (துவக்கம் 1905)
   தலைவர், மஹாதேஜோ மண்டல சபை (துவக்கம் 1926)
   ''திருவேரகம்'', 117, 86வது தெரு, முதல் அவன்யூ (வடக்கு)
   அசோக் நகர், சென்னை - 600 083
   தொலைபேசி : 24890490

2. சித்தாந்த சரபம், சித்தாந்த கலாநிதி
   **முனைவர் கோமதி சூரியமூர்த்தி**
   மேனாள் பேராசிரியர், சைவசித்தாந்தத்துறை
   மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
   391, இந்திரா காந்தி தெரு, ஆழ்வார் நகர்,
   நாகமலை, மதுரை - 625 019
   தொலைபேசி : 0452-2458318



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் பாடல்களில் சைவ சமயாச்சாரியர் நால்வர் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும் |
| ஆசிரியர் | : | சித்தாந்த சரபம் முனைவர் கோமதி சூரியமூர்த்தி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சைவ சித்தாந்தத் தத்துவம் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2013 |
| தாள் | : | 60 GSM |
| நூல் அளவு | : | 8.5" x 5.5" |
| மொத்த பக்கங்கள் | : | 80 |
| நூல் அடக்கவிலை | : | ரூ. 40/- |
| வெளியிட்டோர் | : | நடராசன் - கனகாம்புஜம் அறக்கட்டளை |
| அச்சிட்டோர் | : | திரு. S. அரங்கநாதன்,<br>S.S. கிராபிக்ஸ்,<br>54/2, முகம்மது உசேன் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>தொலைபேசி : 28485236<br>அலைபேசி : 9884054572 |

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| பதிப்புரை | VI |
| முன்னுரை | XII |
| 1. நூன்முகம் | 1 |
| 2. திருஞானசம்பந்தரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும் | 13 |
| 3. திருநாவுக்கரசரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும் | 26 |
| 4. சுந்தரரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும் | 38 |
| 5. மாணிக்கவாசகரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும் | 45 |

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பதிப்புரை

''ஒரு சிவன் எழுதிய உயர் திருமுறையு நல்
இருவரொடு ஒருவர் செய் இசைமலி முறைகளும்
நிருமல அருணையன் நிறைபுகழ்களும் உணர்
அருளுடையவர் அயில் அரைய உன் அடியர்
– திருவலங்கற்றிரட்டு பாடல் 90

வேலைத் தாங்கிய முருகப்பெருமானின் அடியர் யார் என்று அத்தியாச்சிரம, சுத்தாத்துவித, வைதிக, சைவ சித்தாந்த ஞானபானு எனப் போற்றப்படும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அவர்கள் ''திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டம்'' பாடல் 90ல் குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட பாடலுக்கு அருநூற்புலமை ஆன்றோர் முனைவர் ப. இராமன் அவர்கள் (மேனாள் தலைவர், மஹா தேஜோ மண்டல சபை) எழுதிய விளக்க உரை வருமாறு:-

''ஒப்பில்லாத சிவபெருமான் ஒரு வேதியன் கோலத்தில் வந்து மாணிக்கவாசகர் சொல்லத் தம் திருக்கையால் எழுதிய திருவாசகம் எனும் உயர்ந்த திருமுறையும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி ஆகிய மூவர் முதலிகள் பாடியருளிய பண்சுமந்த தேவாரங்கள் எனும் திருமுறைகளும், மும்மலமும் நீங்கப் பெற்ற அருணகிரிநாதர் பாடியருளிய நிறைந்த திருப்புகழ்களும் ஆகியவற்றை உணரும் அருளுடையவர் வேலரசே! உன் அடியர் ஆவர்''

''திருமுறை சொலாதவன், மறைமொழி கலாதவன், சிவநெறி நிலாத சிதடன், முருகனும் மயேசனும் ஒரு பொருள் எனாதவன் ஆகியோர் முடிவு உடை மகாபதம் பெறுவது இலை''

என்று பாம்பன் சுவாமிகள் மேலே கூறப்பட்ட குற்றங்கள் தன்னை வந்து சேராமல் இருக்க அருள் புரிய வேண்டுமென்று திருவண்ணாமலைப் பதியின் இறைவனைப் பிரார்த்திக்கின்றார்.

மேற்கண்ட பாடல்கள் மூலம் பாம்பன் சுவாமிகள் அவர்கள் சைவ சமயாச்சாரியார் நால்வர் மீது கொண்டுள்ள மதிப்பும், தூய பக்தியும் விளங்குகின்றன. இவர்களைப் பாம்பன் சுவாமிகள் பல பாடல்களில் புகழ்ந்துள்ளார்கள்.

இவர்கள் தெய்வ மகிமைப் பெற்றவர்கள் என்றும், இவர்களின் பாடல்களைச் சிவபெருமான் அங்கீகரித்துள்ளார் என்றும் இவர்களை நம்பினோர் இவர்கள் அடைந்த இடத்தை அடையலாம் என்றும், **சிவன் கூட வேண்டியதில்லை, சம்பந்தரைப் பற்றினால் சிவனைப் பற்றியுள்ள இவர் அவரிடம் சேர்ப்பார்** என்றும் பாம்பன் சுவாமிகள் அறிவித்துள்ளார்கள். பாம்பன் சுவாமிகளும், சைவ சமயாச்சாரியர் நால்வரும் ஒத்தக் கொள்கைகள், சிந்தனைகள் உடையவராக உள்ளனர். இவர்கள் ஒரே தெய்வ வழிபாடு ஒரே மூர்த்தி, ஒரே மந்திரம் அவசியமென்று வலியுறுத்தியுள்ளனர். பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமான் ஒருவரையே 6666 பாடல்களால் பாடியுள்ளார். முருகனும், சிவனும் ஒன்றே என்ற கருத்துடையவர். இந்நால்வரும் சிவனைத் தவிர வேறு தெய்வத்தின் மீதும் பாடவில்லை. இவர்கள் காலத்துக்கு முன்பு பல தெய்வ வழிபாடு இருந்தது. ''கிறிஸ்தவ மதத்தில் கிறிஸ்து நாதரே மூர்த்தி ஸ்தானத்திலுள்ளார். இஸ்லாத்தில் முகமது நபி அந்நிலையில் நிற்கின்றார். இவ்வுண்மைகளையெல்லாம் கருதி சைவ சமயாசாரியர்கள் உபதேசித்தருளியபடி சைவர் ஏகமூர்த்தி வழிபாட்டில் உறைத்து நிற்கக்கடவர். ஜென்மம் கடைத்தேறுதற்கு ஒரு தெய்வ வழிபாடு இன்றியமையாதது. இது செய்யாதவன் முத்தி மார்க்கத்தின் முதற்படியிலும் கால் வைக்காதவன். வணங்கற்குரிய ஏகமூர்த்தியை முற்றிலும் நம்பவேண்டும். வினைவழி துன்பம் வரும். வந்தாலும் அம்மூர்த்தி வழிபாட்டில் நழுவக்கூடாது.''

**''வானம் இடிந்து தலையில் விழும்படி வம்பு வந்தாலும் என்னை**
**அந்தக் கானமயில் முருகையன் திருவருள் கைவிடமாட்டாதே''**

என்னும் உறுதிப்பாட்டை உய்த்துணர வேண்டும். தன்னுயிர் போமளவும் இயேசுநாதர் கடவுளை விடவில்லையே கருதுங்கள். சைவர்க்கு வாய்த்த சிவமாந்தெய்வமும், சிவமந்திரமும், உபகரணமும் பெருஞ்சிறப்புடையன. சைவர் சிவனென்னு மூர்த்தியைச் செவ்வனே பற்றி வழிபடக் கடவர். இன்றேல் உயர்கதி வாய்க்காது. பல தெய்வ வழிபாடு வியபிசாரம் போன்றது. வெளிப் பூசைகளிலும் உட்பூசைகளே சிறந்தவை. வெளிப் பூசைகளில் மாகேச்சுர பூசை சிறந்தது. சிவனடியார்க்குத் திருவமுது செய்விப்பது மாகேச்சுர பூசை.''

‘‘உட்பூசையில் இறைவனைக் கரசரணாதி அவயங்களோடு தியானிக்க வேண்டுமென்றே யான் கூறுவேன். இரவு பகலாய் இந்நாட்டம் உங்களிடம் பெருகினால் நீங்கள் பரமயோகிகளாவீர்கள். அநவரதமு முடியாவிடினும், உண்ணும்முன் மூன்று வேளையாவது சிவனைச் சிந்தை செய்மின. நாள்தோறும் விடியற்காலையில் கை கால் சுத்தி செய்து அரைமணி நேரமேனும் அம்மூர்த்தியை முறைப்படி நினைமின். அதனால் எல்லா நன்மையுமுண்டாம். இவ்விரு வகை பூசைகளையும் டம்பத்திற்காகச் செய்யன் மின். முருகவேள் உங்களெல்லோர்க்கும் தன்னின்னருளை வழங்குமாக’’ என்று பாம்பன் சுவாமிகள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்!

நால்வர்களின் கருத்துக்களின் நுட்பங்களை அறியவும், உணரவும் பாம்பன் சுவாமிகள் பாடல்கள் பெரிதும் உதவுகின்றன. இந்த அடிப்படையில்தான் சித்தாந்தசரபம், சைவ சித்தாந்த கலாநிதி முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** அவர்கள் எங்களுடைய வேண்டுகோளைக் கனிவுடன் ஏற்று **‘‘பாம்பன் சுவாமிகள் பாடல்களில் சைவ சமயாச்சாரியர் நால்வர் வரலாற்று குறிப்புக்களும், சிந்தனைகளும்’’** என்ற நூலை எழுதியுள்ளார்கள்.

ஏற்கனவே அம்மையார் அவர்கள் ‘‘பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் உணர்த்தும் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள், பாம்பன் சுவாமிகளின் பெருமை’’, ‘‘பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் பாடல்கள் உணர்த்தும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்’’ என்ற நூல்களை எழுதியுள்ளார்கள். முதல் நூலும், மூன்றாம் நூலும் எங்கள் குடும்பம் சார்பிலும், இரண்டாம் நூல் சைவ சித்தாந்தப் பெருமன்றம் சார்பிலும் வெளியிடப்பட்டன.

அம்மையார் அவர்கள் தமிழ், சைவ சமய தோத்திரங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றில் மிகச்சிறந்த புலமையுடையவராகவும், சொல்லாட்சி, எழுத்தாற்றல், சிந்தனைத் தெளிவு ஆகியவற்றில் வல்லுனராகவும், சிவபெருமான் மீது அயரா அன்புகொண்டு அவரின் அருளைப் பெற்றவராயும் திகழ்கின்றார்கள் இவர்கள் 20க்கும் மேற்பட்ட சைவ நூல்களையும், நூற்றுக்கணக்கான சைவ சமயம் சார்ந்த கட்டுரைகளையும் எழுதி பல்வேறு விருதுகள், பட்டங்கள் பரிசுகள் பெற்றுள்ளார்கள். சைவ சமய ஆதீனங்கள், பிரபலமான சைவ சமய சபைகள் இவரைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். சைவ சித்தாந்தப் பெருமன்றம் (தோற்றம் 1905) ‘‘சித்தாந்த சரபம்’’ விருது அளித்து பெருமைப்படுத்தியுள்ளது.

அன்பு, அருள், அடக்கம், ஒழுக்கம், மனிதநேயம், பொறுமை ஆகிய பண்புகளின் உறைவிடமாய் விளங்குகின்றார்கள். இவைகளுக்கெல்லாம் மூலகாரணமாய் ஊக்கமும், உற்சாகமும் இவருக்கு அளித்து வருபவர் இவருடைய கணவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழக சூரியசக்திதுறை மேனாள் பேராசிரியர் திருவாகச்சுடர் சித்தாந்த தொண்டர் மாமணி முனைவர் **செ.ஈ. சூரியமூர்த்தி,** M.Sc., M.S. (USA)., Ph.D. (USA) அவர்கள். கணவனும் மனைவியும் தங்களைச் சிவப்பணியில் அர்ப்பணித்திருப்பது திருவருள் செயலேயாகும்.

பாம்பன் சுவாமிகளால் 1926 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மஹா தேஜோ மண்டல சபையும், எங்கள் பெற்றோர் நடராசர் - கனகாம்புஜம் அறக்கட்டளையும் இணைந்து சென்னை, திருவான்மியூரிலுள்ள பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் 26.03.2013 தேதியில் நடத்தும் பங்குனி உத்திர பௌர்ணமி விழாவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மேனாள் ஆணையர் **திரு. ஜி. இராமகிருஷ்ணன்,** இ.ஆ.ப. (நிறைவு) அவர்கள் தலைமையில் ''பாம்பன் சுவாமிகள் பாடல்களில் சைவ சமயாச்சாரியர் நால்வர் வரலாற்றுக் குறிப்புக்களும், சிந்தனைகளும் நூல்'' திருவருள் துணையோடு எங்கள் குடும்பம் சார்பாக வெளியிடப்படுகிறது. கடந்த வருடங்களில் பாம்பன் சுவாமிகளைச் சார்ந்த 20 நூல்கள் வெளியிடும் பாக்கியத்தைப் பெற்றோம்.

**பங்குனி உத்திர பௌர்ணமி விழா : பழநி முருகன் தரிசனம்**

பாம்பன் சுவாமிகள் இராமேஸ்வரம் அருகிலுள்ள பிரப்பன் வலசைப் பதியின் மயானத்தில் நான்கு பக்கங்களிலும் முள்வேலி நாட்டப்பட்ட சதுரக்குழி அமைத்து, அதனுள் அமர்ந்து ஊண், உறக்கமின்றி 35 நாள்கள் தவமேற் கொண்டு, அகத்தியர், அருணகிரிநாதர் உடன்வர பழநி முருகப்பெருமான் தரிசனமும் உபதேசமும் பெற்றது விஜய வருடம் (1894) பங்குனி உத்திர பௌர்ணமி நன்னாள். இப்புனித நிகழ்ச்சியை 119வது ஆண்டு விழாவாக 26.03.2013 தேதியில் கொண்டாட குருவருள் கூட்டியுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டும், பாம்பன் சுவாமிகள் புகழ், கொள்கைகள், பக்தி மார்க்கம், அறிவுரைகள் மக்களிடையே பரவி அவர்கள் நன்னெறி அடைவதற்கும் 17.03.2013 தேதியில் இன்னிசை, ஒப்பித்தல், வினாவிடை போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு திரு. ஜி. இராமகிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைத் துணைநலம் **திருமதி. இராணி இராமகிருஷ்ணன்** அவர்கள், அரிமா சங்க மேனாள் ஆளுநர், இந்தியன் எண்ணெய் நிறுவன சமையல் வாயு ஸ்டார் விநியோகஸ்தர் நாவீரன் **இராஜ மகேந்திரன் நினைவுப் பரிசுகள்.** சான்றிதழ்கள் வழங்க இசைந்துள்ளார்கள்.

மேற்கண்ட விழா, நூல் வெளியீடு, பரிசளிப்பு ஆகியவற்றைச் சென்னை, திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மஹா தேஜோ மண்டல சபையுடன் இணைந்து எங்கள் பெற்றோர் நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை பெயரில் நடத்த குருவருள் துணை செய்கின்றது. எங்கள் எதிர்கால சந்ததியரும் இப்பணியைத் தொடர்ந்து நடத்த பாம்பன் சுவாமிகளின் அருளை இறைஞ்சுகின்றோம்.

சித்தாந்த சரபம் முனைவர் கோமதி சூர்யமூர்த்தி அவர்கள் மிகச்சிறந்த இந்நூலை எழுதித்தந்து உதவியதற்கு எங்கள் குடும்பத்தின் சார்பிலும், மஹா தேஜோ மண்டல சபையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.இவர்களுக்கு பாம்பன் சுவாமிகள் குருவருளும், மயூரநாதப் பெருமாள் திருவருளும் தொடர்ந்து அருள் பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இந்நூலைப் பக்தி பூர்வகமாகவும், தொண்டாகவும் கருதி மிகக் குறைந்த நாட்களில் செவ்வனே அடக்க விலையில் அச்சிட்டும், இவ்விழா அழைப்பிதழை வழவழப்பான தாளில் அருமையாக அச்சிட்டு அன்பளிப்பாகவும் வழங்கிய சென்னை, இராயப்பேட்டை, முகமது உசேன் தெருவிலுள்ள எஸ். எஸ். கிராபிக்ஸ் உரிமையாளர் **திரு. எஸ். அரங்கநாதன்** அவர்கட்கு நன்றி. இவர்கள் எங்கள் குடும்ப அறக்கட்டளைக்கும், சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்கும் பல நூல்களைச் சிறப்பாக அச்சிட்டு உதவுகிறார் என்பதை நன்றி உணர்வோடு போற்றுகின்றோம். இந்நூலை அச்சிட்டு வெளியிட அனுமதி தந்த மஹா தேஜோ மண்டல சபைக்கு நன்றி.

இந்நூல் பாம்பன் சுவாமிகளின் பக்தர்கள், திருமுறைகளிலேயே தோய்வுற்ற சான்றோர்கள், சைவசமய ஆர்வலர்கள் ஆகியோர்களுக்குப் பயனுடையதாக அமையும் எனக் கருதுகின்றோம்.

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம், தருமை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம் ஆகியோர்களின் அருளாசியுடனும், பாம்பன் சுவாமிகள் குருவருள், மயூரநாதப் பெருமான் திருவருள் துணையோடும் இந்நூல் வெளியிடப்படுவது எங்கள் தவப்பேராகக் கருதுகிறோம்.

இங்ஙனம்
*நடராசன்-கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக,*
*பாம்பனார் - வாரியார் அடிப்பொடி*
*சைவத் திருமுறைச் செம்மல்*
*சித்தாந்த ரத்தினம் செ.வே. சதாநந்தன்*
Chief Refinery Co-ordinator (Retd.), Indian Oil
*தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம் (தோற்றம் 1905)*
*தலைவர், மஹாதேஜோமண்டல சபை (தோற்றம் 1926)*

**அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள் :**

**பொ.ந. லோகநாதன்**
Manager (Retd.) Indian Oil

**பொ.ந. நமசிவாயம்**
G.M. (Retd.) Madras Fertilizers and Managing Director
A.B.N., Logistics

**வி.ச. சிவக்குமார்**
Manager (Retd.) Southern Industries

**கீதா இராசமகேந்திரன்**
Indian Oil Gas Star Distributor

## ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் உபதேசம்

**''சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திருநாரையூர் திருத்தலத்தில் ஒரு அன்பரின் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தேன். அப்பொழுது ஓர் அரிய புனிதமான கனவு கண்டேன்.**

**விடியற்காலை 4 மணி இருக்கும். ஒரு வயல்வெளியில் சென்று கொண்டிருந்தேன். வயல் வரப்பின் மீது முருகப் பெருமானைக் கனவிலும், நனவிலும் தரிசித்த தவராஜ முனிவர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளித்தார். நான் அருகில் சென்று வணங்கி நின்றேன். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் என்னை கருணையுடன் பார்த்துக் 'கு'கரத்தில் தொடங்கி 'ம'கரத்தில் முடிகின்ற சடக்கர மந்திரத்தை என் செவியில் உபதேசித்து அருளினார். நான் 'ந'கரத்தில் தொடங்கி 'ய'கரத்தில் முடியும் சடக்கர மந்திரத்தை உச்சரிப்பது வழக்கம். கண்விழித்துக் கொண்டேன். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் பரம கருணையை நினைந்து உள்ளம் உருகித் தியானம் புரிந்தேன்''.**

*– திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்*

உ

# முன்னுரை

சைவசித்தாந்த கலாநிதி, சைவநன்மணி, சித்தாந்த சரபம் முனைவர் கோமதி சூரியமூர்த்தி

''பிறவிக் கடல் கடத்தும் பெம்மான் குகன்தாள்
உறவித்தும் ஆசி உதவும் – துறவியர்கள்
தவம் பற்றென வணங்கும் சைவசமய குரு
பாம்பன் அடிகள் பதம்''

அடியேனின் சிறுவயதில் அன்புத் தாயார் தினம் வழிபாட்டின் போது பாராயணம் செய்யும் பாடல்களுள் சண்முகக் கவசமும் உள்ளடங்கும். அப்பொழுது அக்கவசம் பாம்பன் சுவாமிகள் அருளியது என்று எனக்குத் தெரியாது. சுவாமிகளைப் பற்றியோ, அவர் நூல்களைப் பற்றியோ அவ்வளவாக அறியாதிருந்த அடியேனுக்கு, சுவாமிகளின் நூல்கள் பலவற்றை அன்பளிப்பாகத் தந்து அறிந்து கொள்ளும்படி ஆற்றுப் படுத்தியவர்கள் சென்னை சைவசித்தாந்த பெருமன்றத்தின் தலைவரும், மஹாதேஜோ மண்டல சபைத் தலைவருமான பாம்பனார் – வாரியார் அடிப்பொடி சித்தாந்த ரத்தினம் செ.வே. சதாநந்தன் ஐயா அவர்கள் ஆவார்.

ஐயா அவர்களின் குடும்பத்தினர் வழிவழியாகப் பாம்பன் சுவாமிகளிடத்தும், வாரியார் சுவாமிகளிடத்தும் பக்தி உடையவர்கள். பாம்பன் சுவாமிகட்கு முருகப் பெருமான் காட்சி கொடுத்த நாள் பங்குனி உத்திர நாள். ஐயா அவர்களின் குடும்பத்தினர் பங்குனி உத்தர விழாவை 40 வருடங்களாகச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். அந்நாளில் குடும்பத்தினர் அமைத்த அறக்கட்டளையின் உதவியால் நூல்கள் வெளியிட்டு இலவசமாக கொடுத்து வருகின்றார்கள். இதுவரை 20 நூல்கள் வெளியிட்டுள்ளார்கள். அவற்றுள் பல டாக்டர் ப. இராமன் அவர்கள் எழுதியவை. அவர் அமரராகி விட்டதால், அடியேன் பால் அதிக அன்புடைய தலைவர் ஐயா அவர்கள் சுவாமிகள் பற்றி நூல் எழுதும் வாய்ப்பை அடியேனுக்குத் தந்தார்கள். அடியேனும் அவரைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு எனக் கருதி ஒத்துக் கொண்டேன். ஐயா அவர்கள் பலரும் படிக்கக் கூடிய விதத்தில் சமுதாயத்திற்குப் பயன்படும்படி நூல் எழுதும்படிக் கூறியதால் அடியேன் எழுதிக் கொடுத்த நூல் **''பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள்''** என்பதாகும். இந்நூல் மார்ச் 19,

2010இல் திருவான்மியூரில் பாம்பன் சுவாமிகள் கோயில் வளாகத்தில் பங்குனி உத்திர நாளன்று ஐயா அவர்களின் குடும்பத்தினர் சார்பில் வெளியிடப்பட்டது.

அனைத்து சைவமக்களும் சுவாமிகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்ட **''பாம்பன் சுவாமிகளின் பெருமை''** என்ற நூல் 2011, ஜூன் மாதம் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்ற 106ஆம் ஆண்டு நிறைவு விழா அன்று மாதவத்தூரில் மலேசியா, சித்தாந்த சரபம், டான்ஸ்ரீ அமரர் சோமசுந்தரம் செட்டியார் - புவான் ஸ்ரீ தெய்வானை ஆச்சி நினைவாக நிறுவப்பட்ட அறக்கட்டளை நிதியால் வெளியிடப்பட்டது.

உய்தி தரும் சிவஞானப் பெருவாழ்வை நடத்த உலகோரை ஆற்றுப்படுத்த விரும்பியும், சித்தாந்த சரபம் என்ற பட்டம் கொடுக்கப்பட்டிருந்ததாலும், ஐயா அவர்கள் அறிவுரைப்படி எழுதிய மூன்றாவது நூல் **''பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்''** என்பதாகும்.

இந்த ஆண்டு ஐயா அவர்கள் சுவாமிகளின் நூலை எடுத்துக் கொண்டு வினாவிடை முறையில் எழுதினால் நலம் என்றார்கள். மெய்கண்ட சாத்திரங்களில் ''திருவருட்பயன் - சிறுவர்க்கேற்ற எளிய உரையும் வினா விடையும்'' சிவஞானபோத வினாவிடை'' என்ற நூல்கள் எழுதியுள்ளேன். சுவாமிகளின் நூலை வினாவிடை முறையில் எழுத நினைத்தபோது, பக்கங்கள் அதிகம் வராது போலத் தோன்றியதாலும், உடல்நலக் குறைவாலும் திகைத்து எழுத தாமதாகி விட்டது. சென்ற மாதம் கணவர் ''பாம்பன் சுவாமிகள் போற்றும் நால்வர்'' என்ற தலைப்பில் எழுதச் சொன்னார்கள். அது பற்றிச் சிந்தித்தபோது, அடியேன் உள்ளத்தில், அத்தலைப்பை விட **''பாம்பன் சுவாமிகளின் பாடல்களில் நால்வர் வரலாற்றுக் குறிப்புகளும் சிந்தனைகளும்''** என்ற தலைப்பில் எழுதுவதே பொருத்தமாய்த் தோன்றியது. உடனே ஒரு வாரத்திற்குள் தரவுகள் சுவாமிகளின் நூல்களிலிருந்து திரட்டித் தொகுத்து நூல் எழுதப்பட்டது. நூல் எழுத வாயப்புத் தந்த ஐயா அவர்கட்கும், அறக்கட்டளை நிறுவியுள்ள உறுப்பினர்கள் அனைவர்கட்கும் அடியேனின் உளங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சுவாமிகளின் தொகுப்பு நூல்களுள் முதல் ஐந்து மண்டலங்கட்கு உரைகள் மஹா தேஜோ மண்டல சபையினரால் வெளியிடப்பட்டுள்ளன. முதல் மண்டலத்திற்கு அமரர் முனைவர்

ப. இராமன் அவர்களும், இரண்டாம் மண்டலம் திருவலங்கல் திரட்டு இரண்டாம் கண்டத்திற்கும், ஐந்தாம் மண்டலமான திருப்பவிற்கும் சைவாகம சிற்பாகம கலாநிதி, ஆகமப் பேராசிரியர் முனைவர் **S.P.** சபாரத்தினம் அவர்களும் உரை எழுதியுள்ளார். அவ்வுரை நூல்களே அடியேன் இந்நூலைக் குறுகிய காலத்தில் எழுதி முடிக்கப் பெரிதும் உதவின. உரை ஆசிரியர்கட்கும், மஹா தேஜோ மண்டல சபையினர்கட்கும் அடியேனின் உளங்கனிந்த நன்றி. இந்நூலைக் குறுகிய காலத்தில் செவ்வனே அச்சடித்துத் தந்த அச்சகத்தார்க்கும் நன்றி.

அடியேன் மேலும் பல நூல்களை எழுதி வெளியிட சிவம் பெருக்கும் திருத்தொண்டு ஆற்றிவரும் சைவ ஆதீனங்களின் குரு மகா சந்நிதானங்களின் ஆசீர்வாதங்களை வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

அடியேன் நூல் எழுத உற்ற துணையாய் உதவுகின்ற கணவர் சித்தாந்தத் தொண்டர் மாமணி டாக்டர் செ. ஈ. சூரியமூர்த்தி M.S. (U.S.A.), Ph.D., (U.S.A) மேனாள் சூரிய ஆற்றல் துறைப் பேராசிரியர் அவர்கட்கும் என்றும் நன்றியுடையேன்.

சிவநெறிவழி வாழ்ந்து அடியேனின் உள்ளத்தில் இளம் வயதிலேயே சைவசமய உணர்வை ஊன்றி வளர்த்து ஆளாக்கி அமரர்களாகி விட்ட பிறந்த வீட்டுப் பெற்றோரையும், புகுந்த வீட்டுப் பெற்றோரையும் நினைவு கூர்ந்து வணங்குகின்றேன்.

கோமதி சூரியமூர்த்தி

*''சொன்னால் பிறப்பு ஒழியும் சூராய கூற்று அகலும்*
*எந்நாளும் பேரின்பம் எய்து நெஞ்சே - முன்னாள்*
*பொருசூரன் வல்உடம்பு போழ்ந்த அயில் ஏந்து*
*முருகவேள் என்னு மொழி''*

***- குமரகுருதாச சுவாமிகள் பாடல்***

*''பெற்றவரும் மறப்பார், பிறந்தார், மகரும் மறப்பார்*
*உற்றவளும் மறப்பார், ஒரு காலமும் நீ மறவாய்*
*அற்றம் அறுத்து அருள்வோர் உனை அன்றி எவர்உளரே*
*தெற்று என ஆட்படுவார்க்கு அருள் சிந்து புரத்தானே''*

***- திருச்சிந்துபுரம் (திருச்செந்தூர்)***

*''முன் காலை உதைத்தவன் கால்முளையாய் நின்றாய்*
*பின் காலை அடுத்தவரைப் பெரிதும் காத்தாய்*
*என் காலை இனிது அளித்தாய் இனி எஞ்ஞான்றும்*
*நின் காலை எனக்கு அளி''*

***- அசோகசாலவாசம்***

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

## மகாபதம் பெறுவது இலை

திருமுறை சொலாதவன் மறைமொழி கலாதவன்
சிவனெறி நிலாத சிதடன்
செலல் வரவு எணாதவன் கொலைவினை விடாதவன்
தினும் முடை மறாத புலைஞன்

குருஅடி தொழாதவன் பெறுமொழி பெறாதவன்
குணநலன் இலாத அறிஞன்
குகநம எனாதவன் துறவறம் உறாதவன்
குடிவெறி அறாத முருடன்

முருகனும் மயேசனும் ஒரு பொருள் எனாதவன்
முசுமனம் நையாத விரதன்
முடிவுஉடை மகாபதம் பெறுவது இலைஆகலின்
மொழி கறை நணாமல் அருள்தந்து

அருளும் அருணாசலம் தனில் அதனை நாமம் ஒன்று
அழகொடு நிலாவ நினது அன்பு
அடிமலரையே உளம் பணினவன் ஐயா அணங்கு
அரைய என் உள் ஆடி அருளே. (10)

## சைவசித்தாந்த சாத்திரம்

குமரகுருதாச சுவாமிகள் பாடல்

பரமன் அருள்மொழியாய ரௌரவச் சுருதியின்
பனிரண்டு சூத்திரத்தைப்
பற்றியுள தென்மொழிச் சிவஞான போதநற்
பனுவல் பொருட்கியைந்த
திருவுந்தியார் நெஞ்சுவிடுதூது சிவஞான
சித்தியார் மெய்விளக்கம்

திருவருட்பயன் உண்மைநெறி விளக்கம் புகழ்
    சிறந்த இருபா இருபது
சரதநுவல் பஃறொடை கொடிக்கவி சிவப்பிரகா
    சம்வினா வெண்பாஉரன்
தருகளிற் றுப்படி நிராகரணம் எனும் இனிய
    சைவசித் தாந்த நூல்கள்
மரபாய் விளக்குநெறி தெளிவே மயக்குஅன்று
    மனம் வைத்து அம்முடிவை அருள்வாய்
வளம் ஒழுகு இராமேசர் தளிமேலை வாயிலில்
    வளர் குமர குருநாதனே.

## வேதாந்த சித்தாந்த சமரசம்

முத்தமிழ் காதலார் சீகாழி மாமுனி
    முதுக்குறைவு விஞ்சும் அப்பர்
முருகு கிளர் ஆரூரர் திருவாதவூரர்
    முடங்குகடி ஒன்பதின்மர்
தத்துவத் தெளிவுடைய பட்டினத்தடிகள் உயர்
    தகை கொண்ட அருணகிரியார்
தாவில் சிவவாக்கியர் தவம் பெருகு திருமூலர்
    தாயுமானவர் என்பவர்
சுத்தமுறு வேதாந்த சித்தாந்த சமரச
    சுபாவமாய் அமுதநெறியாய்ச்
சொற்ற உயர்வாக்குகளும் என் சம்மதத்தில் உள
    துணிபுக்கு இயைந்த துணிபே
மத்தம் உடை என்னைநீ அத்துணிபில் மாறாது
    வைத்து அருள வேண்டும் அன்றோ
வளம் ஒழுகு இராமேசர் தளிமேலை வாயிலில்
    வளர் குமர குருநாதனே

# பாம்பன் சுவாமிகள் அர்ச்சனை மலர்

*ஸ்ரீமத் - சுவாமிகளின் சீடர் திருவாளர் ச. சச்சிதானம் பிள்ளை அவர்கள் அருளிய போற்றித் திருஅகவல்*

**அறிவோய் போற்றி அறவோய் போற்றி**
**செறிசிவ பூரணஞ் சேர்ந்தோய் போற்றி**

**ஆரணம் ஆகமம் அருந்தமிழ்க் கடல் கடைந்து**
**ஏரண அறிஅமுதம் ஈந்தோய் போற்றி**

**இம்பரில் இருமையும் மிகந்து உயர் நலமுறச்**
**செம்பொருள் சேய்கழல் பற்றினை போற்றி**

**ஈகையில் சிறந்தோய் எழிலுரு அடைந்தோய்**
**தோகை மஞ்ஞையன் நெறி துலக்கினோய் போற்றி**

**உள்ளத் துறவினோய் ஒண்புறத் துறவினோய்**
**கள்ளங் கடிவோய் கரிசிலோய் போற்றி**

**ஊரார் பொருள்புகழ்க்கு ஒல்கா உரத்தொடு**

**சீரார் பரன் அருள் தேடினை போற்றி**

**எண்குண பஞ்சர இறைவனே குருவாய்**
**ஒண்பொருள் உணர்த்த உணர்ந்தனை போற்றி**

**ஏமவப் பெருநெறி எவரும் அறிந்து உயற்**
**காமருநூல் பல அருளினை போற்றி**

**ஐயந் தீர்க்கு நுண்ணறிவோய் போற்றி**
**வையம் குகன் புகழ் வளர்த்தோய் போற்றி**

**ஒப்பில் சீர் முருகவேள் ஒப்பவை வண்ணஞ்**
**செப்பு சித்திரக்கவி செயவலோய் போற்றி**

**ஓம்பொருள் முருகென உணர்த்து சாத்திரம்பல**
**மேம்பட நீயே விரித்தனை போற்றி**

**ஔவியம் இல்லா அருட்குரு மணியே**
**செவ்விய முனிவ! திருவடி போற்றி**

**கவின் பாம்பன் வருகண்ணே! போற்றி**
**ஙகர நேர் இல்லற நடத்தினை போற்றி**
**சங்கர குமாரன் தானே விழைந்து**
**ஞய இளமையில் கவி நவின்றனை போற்றி**
**அணவினை போற்றி அவனருள் போற்றி**
**தகரேறு இறைவன் தனைப் பன்னிலையில்**
**நனவிலும் கனவிலும் நணுகினை போற்றி**
**பன்னாறு ஆயிரத்து அறுநூற்று அறுபதொடு**
**மன் ஆறரும் கவி வழங்கினை போற்றி**
**இயல்பில் தரிசிக்க இடர்பல வரினும்**
**அரவணி பரன் சேயடி விடாய் போற்றி**
**இலம் நலம் என அடைந்து இரங்குநர்க்கு இறையருள்**
**வழங்கும் எம் வவீளாவ வாய்மையோய் போற்றி**
**களங்கம் இறைக்குரை கதைநூல் கடிந்து**
**அறவருணையன் என அவிரொளி போற்றி**
**அனவரதமும் எமை ஆண்டருள் செய் எம்**
**மனங்கொள் குமரகுருதாச மாதவனே**

திருச்சிற்றம்பலம்

உ

# நூன்முகம்

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதீக சைவ சித்தாந்த ஞானபானு எனப் போற்றப்படுபவர். சிறு வயதிலேயே முருகப் பெருமான் அருளால், அப்பெருமானைப் போற்றிப் பாடும் அருளுணர்வு அவருக்கு உண்டாயிற்று. முருகப் பெருமானின் அருட்காட்சி காணும் பேறு பெற்றவர். அப்பெருமான் அவர் வாழ்வில் நடத்திய அற்புதச் செயல்கள் பல ஆகும். அவர் முருகப் பெருமானையே ஒப்பற்ற பரம்பொருளாக வழிபட்டவர். அவர் மீது பக்தியுடன் 6666 பாடல்களை அருளிச் செய்தவர். அவற்றை ஆறு மண்டலங்களாகத் தொகுத்துள்ளார். மூன்றாம் மண்டலத்தைச் சேர்ந்த பரிபூரணானந்த போதம் என்ற நூலுக்குச் சிவசூரியப்பிரகாசம் என்ற தலைப்பில் அவரே விசேடவுரை எழுதியுள்ளார். அதுபோல அம்மண்டலத்தைச் சார்ந்த தகராலய ரகசியம் என்ற நூலுக்கு சதானந்த சாகரம் என்னும் தலைப்பில் உரை எழுதியுள்ளார். ஐந்தாம் மண்டலத்தைச் சேர்ந்த திருப்பா என்ற நூலுக்குத் திட்பம் என்று குறிப்புரை எழுதியுள்ளார்.

சுவாமிகள் வடமொழி, தென்மொழி (தமிழ் மொழி) இரண்டிலும் நிரம்பிய புலமை பெற்றவர். அவருடைய உரை நூல்கள் சுவாமிகளின் இருமொழிப் புலமையும், பன்னூற் புலமையையும் தெற்றெனக் காட்டுகின்றன. அவ்வுரைநூலைப் படிப்பவர்கள் சுவாமிகள் உபநிடதங்கள், ஆகமங்கள், சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், தாயுமானவர், பாடல்கள், திருக்குறள், திருப்புகழ், கந்தரலங்காரம், பல்வேறு புராணங்கள் இவற்றில் சுவாமிகட்கு உள்ள பரந்த புலமையை அறிவர்.

சுவாமிகள் திருமுறை ஆசிரியர்கள்பால் மிகுந்த பக்தியுடையவர். திருமுறைகளே சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருவூலங்கள் ஆகும். சைவ சித்தாந்தம் என்பது சைவ சமயத்தின் முடிந்த முடிவான கொள்கை ஆகும். சமயம் என்ற சொல் சமைதல் என்பதன் அடிப்படை. சமைதல் என்பது பக்குவமாதல் என்றும், சமைத்தல் என்பது பக்குவப்படுத்துதல் என்றும் பொருள்படும். உணவைப் பக்குவப்படுத்தும் முறைகள் பலவாகும். அதுபோல உயிர்கள் இறைவனை அடைவதற்குப் பக்குவப்படுத்தும் சமயங்களும் பலவாகும். ‘‘காலில்லாதவன் நடக்கமாட்டான். அதுபோல யாதேனும் ஒரு நல்ல மதத்தைப் பற்றி

நடவாதவன் அறிவும் முடமாகிவிடும்'' என்பது சுவாமிகளின் கருத்து. ''ஒரு சிறு செடி மரமாக வளரும் வரை அதற்குச் சிறு வேலி இடவேண்டும். அதுபோல இறைவன் அருள் செய்யுமளவும் ஒருவருக்கு ஒரு மதம் (சமயம்) தேவைப்படும்'' என்கின்றார் சுவாமிகள். (3. காசியாத்திரை, செ. 443, 449). இவ்வாறு சுவாமிகள் சமயம் பற்றிப் பொதுவாகக் கூறினாலும் சைவ சமயமே சிறந்தது என்ற கொள்கையுடையவர் சுவாமிகள் என்பது வெள்ளிடைமலை.

சுவாமிகள் எழுதியுள்ள வியாசங்கள் 32. அவற்றுள் ஒன்று **''சமயங்களைக் குறித்த வியாசம்''**. அக்கட்டுரையில் (வியாசம் - கட்டுரை) எல்லாச் சமயங்களிலும் மேலானது சைவ சமயம் என்பதற்குச சுவாமிகள், தாயுமானவ சுவாமிகளின் பாடல், தத்துவப் பிரகாச பாடல், சிவஞான தேசிகர் அருளிய பஞ்சாட்சர பதி பசு பாச விளக்கப் பாடல், சிவயோக சாரப் பாடல், உமாபதி சிவம் அருளிய சிவப்பிரகாசப் பாடல் முதலியவற்றை எடுத்துக் காட்டுகின்றார்.

**''சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக்**
**கை வந்திடவே மன்றுள் வெளிகாட்டும் இந்தக்**
**கருத்தை விட்டுப்**
**பொய் வந்துழலும் சமயநெறி புகுதுவேண்டா முக்திதரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே''**

என்று சுவாமிகள் மேற்கோள் காட்டும் தாயுமானவரின் பாடல் சைவத்தின் மேன்மையையும், தொன்மையையும் உணர்த்தும். ஏனைய சமயங்கள் தோற்றுவிக்கப்பட்ட காலமும், தோற்றுவித்தவர் பெயரும் தெரியவரும். ஆனால் சைவசமயமோ இன்ன காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது என்று சொல்ல இயலாதபடி, காலத்தைக் கடந்து நிற்கும் மிக மிகத் தொன்மை வாய்ந்த சமயம் ஆகும்.

சைவசமயாசாரியார்கள் என்று போற்றப்படுபவர்கள் நால்வர். அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர். பிற்காலத்தில் அருளிச் செய்யப்பட்ட சைவ நூல்கள் அனைத்திலும் அவற்றின் ஆசிரியர்கள் குருவணக்கமாக இந்நாள் வரைப் போற்றியுள்ளனர்.

''பூழியர்கோன் வெப்பு ஒழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி''

என்று உமாபதிசிவம் சேக்கிழார் புராணம் எனப்படும்

திருத்தொண்டர் புராண வரலாற்று நூலில் சைவ சமயாசாரியர்கட்கு வணக்கம் கூறுகின்றார்.

**''சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதில்சார் சிவமாம்**
**தெய்வத்தின் மேல் தெய்வம் இல் எனும் நான்மறைச்**
**செம்பொருள் வாய்மை**
**வைத்த சீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்**
**உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம்**
**உயிர்த்துணையே''**

என சைவ எல்லப்ப நாவலர் திருவருணைக் கலம்பகத்தில் நால்வரைப் போற்றுகின்றார்.

பன்னிரு திருமுறைகளில் ஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை திருக்கடைக்காப்பு என வழங்கப்பட்டது. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை தேவாரம் என்றும், ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ள சுந்தரரின் பாடல்கள் திருப்பாட்டு எனவும் வழங்கப்பட்டன. சைவ எல்லப்ப நாவலரே மூவர் அருளிச்செய்த நூல்களைத் தேவாரம் என்ற பொதுப்பெயரால் முதன்முதல் குறிப்பிடுகின்றார். இவர்களைத் தேவார முதலிகள் மூவர் என்பர். மாணிக்கவாசகர் அருளிச் செய்தவை திருவாசகம், திருக்கோவையார் என்ற இரு நூல்களானாலும், சைவர்களின் வழிபாட்டிற்குரிய நூலாகத் திகழ்வது திருவாசகமே.

**''வெம்பந்தம் தாயுமானவர், தீர்த்து உலகு ஆள் வேந்தன்**
**திருஞான சம்பந்தனை அருளால் சாருநாள் எந்நாளோ''**

**''ஏரின் சிவபோகம் இங்கு இவற்கே என உழ**
**வாரம் கொள் செங்கையர் தாள் வாரம் வைப்பது எந்நாளோ''**

**''பித்தர் இறை என்று அறிந்து பேதை பால் தூது அனுப்பு**
**வித்த தமிழ்ச் சமர்த்தர் மெய் புகழ்வது எந்நாளோ''**

**''போதவூர் நாடு அறியப் புத்தர் தமை வாதில் வென்ற**
**வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ''**

என (எந்நாட்கண்ணி - அடியார் வணக்கம், 1-4) நால்வருக்கு வணக்கம் கூறுகின்றார்.

பிறவியாகிய வெப்பத்தை ஒழித்து, உலகத்துச் சிவனடியார்களை ஆட்கொள்ளும் ஞான அரசனாகிய

திருஞானசம்பந்தப் பெருமானை அருளால் சாரும் நாள் எந்நாளோ''

சிவபோகம் இவர்க்கே என்று உலகத்தார் சொல்லும்படிச் சிவாலயத்தைத் தூய்மைப் படுத்தும் கருவியாகிய உழவாரத்தைக் கரத்தில் வைத்த திருநாவுக்கரசரின் திருத்தாள் மீது அன்பு வைப்பது எந்நாளோ?

பித்தர் என அழைக்கப்பட்ட சிவபெருமானைப் பரவை நாச்சியார் பால் தூதனுப்பிய தமிழ்ச் சமர்த்தர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெருமையைப் புகழ்வது எந்நாளோ?

ஞானகாசம் எனப்படும் தில்லையில், ஈழத்திலிருந்து வந்த புத்தர்களை வாதில் வென்ற திருவாதவூரன் எனப்படும் மாணிக்கவாசகரின் அன்பு நிலையை இச்சிப்பது எந்நாளோ''

என தாயுமானவர் நால்வரைப் போற்றுகின்றார்.

இவ்வாறு முன்னோடிகளான அருளாளர்கள் வழியில் குமரகுருதாச சுவாமிகளும்,

''சண்பை நகர்த் திருஞானசம்பந்தர் பார்த்தது போல்
கண் குளிர்வி என்னையும் நீ கருதி நிதம் பாராயோ''

''வாகீசர் பனுவல் எல்லாம் வள்ளுறையக் கேட்டது போல்
ஓசையின் என் பனுவலையும் முற்று நீ கேளாயோ''

''சுந்தரத்தின் முடியில் அடிசூட்டி ஆட்கொண்டது போல்
என்றனக்கும் சேவடிப்பூ இரண்டினையும் சூட்டாயோ?

''வாதவூரடிகட்கு மனம் உவந்து சொற்றதுபோல்
சீதமலர்ச் செவ்வாயைத் திறந்து எனக்கும் சொல்லாயோ''

(2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம்
கண்டம், 3வது கவியியல், செ. 27)

என, சண்பைநகர் எனப்படும் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்குளிரக் கண்டு அருளியது போன்றே என்னையும் கருதி ஏற்றுக்கொண்டு நாள்தோறும் என்னைப் பார்க்க மாட்டாயா?

வாகீசர் என்பது திருநாவுக்கரசர் முற்பிறவியில் முனிவராய் இருந்தபோது உள்ள பெயர். திருநாவுக்கரசர் பாடிய பதிகமாலைகளை எல்லாம் நின்செவிகளில் தங்கியிருக்குமாறு ஆர்வத்துடன் கேட்டது போல், என் பாடல்களையும் மகிழ்ச்சி பொருந்த உற்றுக் கேட்க மாட்டாயா நீ?

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தலையில் திருவடியை வலுக்கட்டாயமாகச் சூட்டி ஆட்கொண்டது போன்றே, என் தலைமேலும் நின் திருவடித் தாமரைப் பூக்கள் இரண்டையும் சூட்ட மாட்டாயா? (இதனைத் திருவடி தீக்கை பெற்றது என்பர்)

மாணிக்கவாசகப் பெருமானுக்கு மனம் உவந்து (திருப்பெருந்துறையில்) ஞானோபதேசம் செய்தது போன்று உனது குளிர்ச்சி மிக்க மலர் போன்ற சிறந்த வாயைத் திறந்து எனக்கு உபதேசம் செய்ய மாட்டாயா? என முருகப் பெருமானிடம் பிரார்த்திக்கும் முறையில் நால்வரைப் போற்றுகின்றார்.

''அரும்புகழ் கொண்ட சமயகுரவர் நால்வரின் பெருமை பொருந்திய திருமுறைப் பாடல்களின் அழகு விளங்கும் தமிழ் மொழியான இதற்கு மேலாக மண்ணுலகிலும், விண்ணுலகிலும் வேறு எது உள்ளது'' என புயல்வாழ் தென்மலைப் பதிகத்தில் கூறுவது (5. திருப்பா II பதிகம் 76. செ. 8) கூறுவது சுவாமிகள் நால்வர் பாடல்களை அனுபவித்து ஓதி உணர்ந்தமையைப் புலப்படுத்துகின்றது.

நால்வரின் வரலாற்றுக் குறிப்பை உணர்த்திய அருளாளர்கள் அவர்களைப் போற்றியுள்ளனர். நால்வருள் மூவர் முதலிகளின் வரலாற்றை நாம் முழுமையாக அறிய உதவும் நூல் சேக்கிழார் அருளிய பெரிய புராணம் என வழங்கப்படும் திருத்தொண்டர் புராணம் ஆகும். திருஞான சம்பந்தரின் வரலாற்றை வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் 1256 செய்யுட்களில் சேக்கிழார் விவரித்துப் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசரின் வரலாற்றை திருநின்ற செம்மை என்னும் சருக்கத்தில் 429 செய்யுட்களில் சேக்கிழார் விவரித்துப் பாடியுள்ளார்.

சுந்தரரின் வரலாறு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வரலாறு போன்று தனி ஒரு சருக்கத்தில் பெரிய புராணத்தில் கூறப்படவில்லை. அந்நூல் ஒரு காப்பியம். அக்காப்பியத் தலைவரே சுந்தரர். எனவே இவரது வரலாறு பெரிய புராணத்தில் திருமலைச்சருக்கத்தில் தொடங்கித் தடுத்தாட்கொண்ட புராணம், விறன்மிண்ட நாயனார் புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், கழறிற்றறிவார் நாயனார் புராணம் (சேரமான் பெருமாள் நாயனார் புராணம்), வெள்ளானைச் சருக்கம் முடியக் கூறப்பட்டுள்ளது.

சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு, அருளிச் செய்யப்பட்ட விரிநூலே சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் ஆகும். சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் மாணிக்கவாசகர் பற்றிக் குறிப்பிடாததால் சேக்கிழார் பெரிய புராணத்தில் அவரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மாணிக்கவாசகரின் காலம் பற்றி ஆய்வறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. சிலர் அவரைச் சுந்தரரின் காலத்திற்குப் பிற்பட்டவர் என்றும், எனவே சுந்தரர் அவரைப் போற்றவில்லை என்றும் கூறுவர். ஆனால் மறைமலையடிகள் போன்றோர் மாணிக்கவாசகர் சுந்தரரின் காலத்திற்கு முற்பட்டவர் என்பர். அப்படியானால் சுந்தரர் மாணிக்கவாசகரைத் திருத்தொண்டத்தொகையில் ஏன் போற்றவில்லை என்ற கேள்வி எழுகின்றது. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் சுந்தரர், மாணிக்கவாசகரைச் சிவமாகவே கருதிப் போற்றியதால் அடியார் வணக்கம் கூறும் திருத்தொண்டத் தொகையில் அவரைக் குறிப்பிடவில்லை என்பார். வாரியாரின் அக்கருத்துக்கு முன்னோடி பாம்பன் சுவாமிகள் எனலாம். ஆறுமுகச் சிவனையே போற்றும் சுவாமிகளின் நூல்களில் ஐந்தாம் மண்டலத்திலுள்ள திருப்பா என்ற நூலின் இரண்டாம் புத்தகத்திலுள்ள, மாணிக்கவாசகர் என்னும் தலைப்பிலுள்ள 70ஆவது பதிகம், சுவாமிகள் அவரைச் சிவமாகவே பாவித்ததை உறுதி செய்கின்றது.

மாணிக்கவாசகரின் வரலாற்றை அறிய நமக்குத் துணை செய்யும் நூல்கள் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற்புராணம், கடவுள் மாமுனிவரின் திருவாதவூரடிகள் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் முதலியன.

சுவாமிகளின் பாடல்கள் சிலவற்றில் நால்வர் வரலாறு பற்றிக் குறிப்புக்களே காணப்படுகின்றன. அவற்றை **''பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் பாடல்களில், சைவ சமயாச்சாரியர், நால்வர் வரலாற்றுக் குறிப்புகளும், சிந்தனைகளும்** என்ற நூல் எடுத்துக் காட்டுகின்றது. அவற்றுள்ளும் திருஞான சம்பந்தப் பெருமானின் வரலாற்றுக் குறிப்புகளே அதிகம் காணப்படுகின்றன. காரணம் சிந்தித்தற்குரியது. அருணகிரிநாதர் முருகப் பெருமானைத் திருஞானசம்பந்தராகவே பல திருப்புகழ் பாடல்களில் போற்றியுள்ளார். சில சைவ நூல்கள் திருஞானசம்பந்தரை முருகப் பெருமானின் அவதாரம் எனக் கூறும். ஆனால் ''பெம்மான் முருகன்

பிறவான் இறவான்'' என அருணகிரிநாதரே கூறியுள்ளார். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அபர சுப்பிரமணியர்களுள் ஒருவரே திருஞானசம்பந்தராக அவதரித்தார் என்று கூறுவார். (சைவசித்தாந்தம் உயிர்கள் இறைவனை அனுபவிக்கக் கடைப்பிடிக்கும் சாதன நெறிகளை பலவாக விளக்கிக் கூறும். அவற்றுள் ஞானத்தில் சரியை முதலியனவாய கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பனவற்றைப் பின்பற்றினோர் அபரமுக்தி பெறுவர் என்று சித்தாந்தம்)

வாரியாரின் கருத்துக்கு முன்னோடி பாம்பன் சுவாமிகள் எனலாம்.

''உந்திவளை மண்டலியின் மாவளங் கிளர் சண்பை
உறையுளில் உதித்து நல்ல
உபநிடத வேதாந்த சித்தாந்த சமரசத்து
உண்மை இற்றென விளக்கா
மிதமில் அற்புத அருட்பாமாலையால் அருகர்
மிடல் வீய அடியர் வாழ
மிகையற்ற **அபர சுப்பிரமணிய நிலை நின்றும்**
**வெளிவந்த பிள்ளையராய்''**

(5. திருப்பா, முதற்புத்தகம்,
4. பரிபூரணானந்த போதம், செ.1)

என கடல்சூழ்ந்த நிலவுலகில் பெருவளனெலாம் பிரகாசிக்கின்ற சண்பை நகரில் (சீகாழிப் பதியில்) தோன்றி, நல்ல உபநிடத வேதாந்த சித்தாந்த சமரச ஞானத்தின் உண்மையானது. இத்தன்மைம்தெனக் குறைவில்லா அற்புத அருட்பாமாலைகளால் விளக்கி, சமணர்களுடைய ஆற்றல் அழியவும், அடியவர்கள் வாழவும் குற்றமற்ற **அபரசுப்பிரமணிய நிலையினின்றும் வெளிப்பட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையராய்** என்று சுவாமிகள் அபரசுப்பிரமணியர்களுள் ஒருவரே திருஞானசம்பந்தராய் அவதரித்தார் என்கின்றார்.

திருஞானசம்பந்தர் பதிகம் தோறும் ஒன்பதாம் பாடலில் திருமாலும், பிரமனும் சிவபெருமான் சோதிவடிவாய் நின்றபோது அதன் அடிமுடி தேடிக் காணாது தளர்ச்சியுற்றதாகக் கூறுவதை விரும்பாது, சுவாமிகளின் காலத்தில் வாழ்ந்த மாணவர்களுள் ஒருசிலர் திருஞானசம்பந்தப்பெருமானை திருமங்கையாழ்வார் என்பார் கல்வியில் வென்று கரத்திலிருந்த வேவினையும் பறித்துக்

கொண்டு சென்றனர் என்று கூறியிருப்பர் போலும், எனவே சுவாமிகள் முன்னர்க் கூறிய பாடலின் உரை விளக்கத்தில், சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறியபடி திருஞானசம்பந்தரின் வரலாற்றை முழுமையாக எழுதி, இத்தகைய சிறப்பு வாய்ந்த திருஞானசம்பந்தப் பெருமானைப் பற்றி திருமங்கையாழ்வார் கூறியதை அறிவுடையோர் கொள்ளார் என கூறுகின்றார். (மேலும் சுவாமிகள் திருமங்கையாழ்வாரின் கூற்று பொருந்தாது என்பதை அவர் திருஞானசம்பந்தரின் காலத்திற்குச் சுமார் நூறு ஆண்டுகட்குப் பிற்பட்டவர் என்று தன் சைவ சமய சரபம் என்ற நூலில் ஆசாரிய விசேட காண்டத்தில் கூறுகின்றார். ஞானசம்பந்தரின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.)

இது சுவாமிகட்குத் திருஞானசம்பந்தர் மீதுள்ள பக்தியை உணர்த்தும். இக்கருத்துக்கு மற்றுமோர் சான்றும் கூறலாம். பிரப்பன் வலசையில் 35 நாட்கள் நிட்டையிலிருந்து வெளியே வந்த சுவாமிகள் பேசாது மௌனமாகவே இருந்தார். பாம்பனிலிருந்து வந்த அன்பர்கள், ''சுவாமி! அடியேங்கள் உய்யும் பொருட்டும், முருகப்பெருமானின் பெருமையை எமக்கு உபதேசிக்கும் பொருட்டும் வாய் மலர்ந்து பேசவேண்டும்'' என வேண்டியபோது சுவாமிகள், ''அவ்வாறு வேண்டுமாயின் பெரிய புராணத்தில் கயிறு சாத்துங்கள். திருஞானசம்பந்தர் புராணம் வருமாயின் பேசுவேன்'' என்று எழுதிக் காட்டிய வரலாறு இங்கு நினைவுகூரத்தக்கது. (அவ்வாறு கயிறு சாத்த திருஞானசம்பந்தர் புராணம் வர, சுவாமிகளும் பேச முயன்று, மூன்றாம் நாள் செவ்வையான வாக்கு வர பாடியருளினார்).

சுவாமிகளின் பாடல்களில் நால்வருள் திருஞானசம்பந்தரின் வரலாற்றுக் குறிப்புக்களே அதிகம் உள்ளன என்பதை இந்நூலை வாசிப்போர் அறிந்துகொள்ளமுடியும். அபரசுப்பிரமணியருள் ஒருவரே திருஞானசம்பந்தராக அவதரித்தார் ஆதலால் முருக பக்தரான சுவாமிகள் அவரின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தம் பாடல்களில் அதிகம் பாடியுள்ளார் எனலாம்.

சுவாமிகள் **''நால்வர் வாக்குகளை வேதாந்த சித்தாந்த சமரசத் தன்மையான அமுத நெறியாகச் சொன்ன உயர்ந்த வாக்குகள்''** என்கின்றார்.

''முத்தமிழ் காதலால் சீகாழி மாமுனி
முதுக்குறைவு விஞ்சும் அப்பர்

முருகுகிளர் ஆரூரர் திருவாதவூரார்
முடங்கு கூடி ஒன்பதின்மர்
தத்துவத் தெளிவுடைய பட்டினத்து அடிகள் உயர்
தகை கொண்ட அருணகிரியார்
தாவில் சிவவாக்கியர் தவம் பெருகு திருமூலர்
தாயுமானவர் என்பவர்
சுத்தம் உறு வேதாந்த சித்தாந்த சமரச
சுபாவமாய் அமுத நெறியாய்ச்
சொற்ற உயர் வாக்குகளும் என் சம்மதத்தில் உள
துணிபுக்கு இயைந்த துணிபே''
(1.8. திருவிராமேச்சுரம், செ. 8)

என்ற பாடலில் நால்வர், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், சிவவாக்கியர், திருமூலர், தாயுமானவர் முதலிய அருளாளர்கள் வேதாந்த சித்தாந்த சமரசத்தன்மையான அமுதநெறியாகச் சொன்ன உயர்ந்த வாக்குகள் என் சம்மதத்திலுள்ள முடிவுக்கு ஏற்ற முடிவேயாகும் என்கின்றார்.

சுவாமிகள் இவ்வாறு கூறுவதன் காரணம் சிந்தித்தற்குரியது. **அவை வேதத்தின் ஞானகாண்டப் பொருளை ஆகமத்திற்கு மாறுபடாவண்ணம் அறிவித்தலின் அவ்வாறு கூறுகின்றார்** எனலாம். புறச்சந்தானாசாரியார்களுள் நாலாமவரான உமாபதிசிவம்,

''வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்
இங்குத் தெரிக்கலுற்றாம்'' (சிவப்பிரகாசம், செ. 7)

என்று கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. (வேதாந்தம் என்பது உபநிடதங்களைக் குறித்தது).

பன்னிரு திருமுறைகளிலும் பழுத்த புலமை வாய்ந்தவர் சுவாமிகள். **''திருமுறைகளைக் கேளாத செவி பயனற்ற செவி''** (1.4. திருக்கயிலாய மலை, செ. 1) என்கின்றார். சுவாமிகள் திருமுறை வாக்குகளை ஆங்காங்கே தம் பாடல்களிலும், உரைநூல்களிலும் மேற்கோள் காட்டியுள்ளார். இந்நூலில் சுவாமிகள் தம் பாடல்களிலும், உரைநூல்களிலும் எடுத்தாண்டுள்ள நால்வர் வாக்குகள் மட்டும் எடுத்துக்காட்டப்படுகின்றன. நால்வர் மீது பக்தி கொண்ட சுவாமிகள் அவர்களின் பதிகப் பொருளமைப்பில் ஒப்புமையுடையதாக சில பதிகங்களும், நால்வர் பாடல்களில் கருத்தொப்புமையில் சில பாடல்களும் யாத்துள்ளார். அவைகளும் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் சுவாமிகள் தம்

பாடல்களிலும், உரைநூல்களிலும் தம் கருத்துக்கு அரணாக நால்வர் பாடல்களையோ அல்லது பாடல் அடிகளையோ மேற்கோளாக எடுத்தாண்டுள்ளமை இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

சுவாமிகள் தம் சைவ சமய சரபம் என்ற நூலில் சடகோப ஆழ்வார், திருமங்கையாழ்வார் (நால்வர் காலத்திற்குப் பிற்பட்டவர்கள்) போன்றோர் நால்வரின் பாடல்கட்கு ஒப்புமையாக திருவிருத்தம், திருவாய்மொழி முதலியவற்றில் சில பாக்கள் இயற்றியுள்ளமையை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். அவை இந்நூலில் கூறப்படவில்லை. அவை சுவாமிகட்கு நால்வர் பாடல்களிலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் உள்ள புலமையையும், வைணவத்தை விட சைவத்தை மேன்மைப்படுத்திக் காட்டும் பண்பையும் புலப்படுத்துகின்றன.

சுவாமிகள் நால்வர் வாக்குகளை மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ள இடங்கள் பலவானாலும், அவற்றுள் சில அடியேனுக்குப் பொருள் புரிவது கடினமாய் உள்ளது. சில மேற்கோள்கள் உரை விளக்கத்தில் சுவாமிகள் கூறும் உபநிடதம் போன்ற பிற நூல்களின் கருத்துக்கட்கு அரணாக நால்வர் வாக்குகளைச் சுட்டிக்காட்டுவது போல் தோன்றுகின்றது. சுவாமிகளின் பாடல்கள் பொருள் புரிவது கடினம். ஆகம நூல்களில் பயிற்சியுடையோர்களே எளிதில் புரிந்துகொள்ள இயலும். திருப்பா இரண்டாம் புத்தகத்திற்கு சற்குரு மானச சௌர மாருதம் என்ற தலைப்பில் டாக்டர் சபாரத்தினம் அவர்கள் உரை எழுதியுள்ளார்கள். அவ்வுரையும் ஏனைய மண்டலங்கட்கு வெளிவந்துள்ள மஹாதேஜோ மண்டல சபையினரின் வெளியீட்டு நூல்களுமே அடியேன் இந்நூலை எழுதப் பெரிதும் துணைபுரிந்தன. சுவாமிகள் அருளிய உரை நூல்களும் நடை மிக கடினம். ஞான நூல்களைக் குரு உபதேசம் செய்யும்போது பரப்பமைந்து கேட்கவேண்டும். அதுபோல சுவாமிகள் பாடல்களையும், உரைநூல்களையும் பரபரப்பின்றி பல முறை ஆழ்ந்து வாசித்தால் தான் பொருள் புரிந்துகொள்ள முடியும்.

சுவாமிகள் தம் உரைகளில் திருமுறைப்பாடல் அல்லது பாடலடிகளை மேற்கோள் காட்டி அதன் பொருள் நுட்பம் இன்னது என சைவசித்தாந்த நெறியினின்று பிறழாது விளக்கியுள்ளார். அவற்றுள் சில இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

சுவாமிகள் திருமுறைகளில் ஆழ்ந்த புலமையும், தெளிவான நுட்ப ஆராய்ச்சியும் உடையவர். எடுத்துக்காட்டாக திருவாசகத்தில்

உள்ள திருப்படையாட்சி பதிகத்திற்குப் பொருள் விளங்காது மயங்குவோர் சிலர். சில உரைநூல்கள் அடிக்கு நேரான பொருளை மட்டும் தருகின்றன. ஊன்றிப் பார்த்தால் இடத்திற்கு ஏற்ப சில இடங்களில் ஆகாதே என்பதற்கு ஆகும் என்றும், சில இடங்களில் ஆகாதே எனக் கொள்வதும் பொருத்தம் எனத் தோன்றும். ''கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே'' என்ற அடி, காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் திரிபுடிஞானம் சிவம் பெருக்கும் அனுபூதியில் நிற்பார்க்கு இல்லை என்பதையே அவ்வடி விளக்கிற்று என்கின்றார்.

திருவாசகத்தில் கோயில் திருப்பதிகத்தில் ''இன்றெனக்கு அருளி'' என்று தொடங்கும் பாடலில் வரும் ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்'' என்ற தொடருக்கு சுவாமிகள் சித்தாந்த நெறியில் நின்று பொருள் நுட்பம் உணர்த்துவது பாராட்டுதற்குரியது.

ஒரு சில இடங்கள் அடியேனுக்குக் குழப்பத்தைத் தந்தன. உதாரணமாக பரிபூரணானந்த போதம் துறவற விளக்கப் படலம் செ. 36, ''உலக விடயங்கள் பலவற்றை அடுக்கிக் கூறி இவற்றின் பேரில் விருப்பம் இருக்குமாயின் துறவற நிலையில் உள்துறவானது தலையெடாது என்ற கருத்தை உணர்த்துகின்றது. அதில் ''இன்னோசை'' என்பதும் ஒரு தடையாகக் கூறப்பட்டுள்ளது. உரை விளக்கத்தில் சுவாமிகள் சங்கீதம் செவிக்கினிதாகலின் அஃது இன்னோசை எனப்பட்டது. இந்திரிய நிக்கிரகம் செய்வார்க்கு இஃது ஒரு தடை என ''வீணை முரன்றெழும் இசையில் இன்பம் மிகுத்திடும் ஆகாதே'' என்ற திருவாசக அடிகளை மேற்கோள் காட்டுகின்றார். பஞ்சாமிர்த வண்ணப் பாடல் இசையுடன் பாடப்பட வேண்டும். அவ்விடத்தில் யான் இருப்பேன் என முருகப்பெருமானே இளைஞனாக வந்து கூறியதாகச் சொன்ன கருத்திற்கு இது முரணாகிறதே என்ற திகைப்பு உண்டாகும். மேலும் திருமுறைகள் இறைவனே ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்குகின்றான் எனக் கூறுகின்றன. திருஞானசம்பந்தரின் இயலிசைத் திருப்பதிங்களில் இசை குறித்த செய்திகள் பல காணப்படுகின்றன. இசையை முற்றிலும் இறை வழிபாட்டிற்கு உரித்தாக்கியவர் சம்பந்தர். இசையால் இறைவனை வழிபட்டு வீடுபேறு அடையலாம் என தம் கால மக்கட்கு உணர்த்தியவர் சம்பந்தர். மேலும் மாணிக்கவாசகரும் ''இன்னிசை வீணையர் யாழினர்'' எனக் கூறுகிறாரே. சுவாமிகள் அதனைத் தடையாகக் கூறுகின்றாரே என்ற குழப்பம் முதலில் ஏற்பட்டது. பின் சுவாமிகள்

குறிப்பிடுவது பக்திப் பாடல்கள் அல்லாத பிற பொருளற்ற பாடல்களின் இசையைக் குறிக்கின்றதாகக் கருதலாமோ? அல்லது மனைவி, மக்கள், மண், பெண், பொன் இவற்றின் மீதுள்ள ஆசையை முற்றிலும் துறந்த சுவாமிகள் தம் துறவு வாழ்க்கைக்கு அஃது தடை எனக் கருதி தம் துறவு அநுபவத்தால் அவ்வாறு கூறியிருக்கலாமோ என நினைத்தேன். சுவாமிகளின் பாடல்களில் மிகுந்த புலமை உள்ளவர்கள் தான் அதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மேலும் டாக்டர் சபாரத்தினம் அவர்கள் கூறுவது போன்று சுவாமிகளின் பாடல்களை பலமுறைப் படித்தால் தான் அவர்களின் திருவுள்ளக்கிடக்கையை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்நூலோ ஒரு வாரத்திற்கும் குறைந்த கால அளவில் தரவுகள் சேகரிக்கப்பட்டு எழுதப்பட்ட நூல். சிவபெருமானின் திருவருள் உள்நின்று உணர்த்த அடியேன் புரிந்துகொண்ட ஒருசில கருத்துக்களை மட்டும் இந்நூலில் எழுதியுள்ளேன். அடியேனை விட அகவையிலும், அநுபவத்திலும் அறிவிலும் முதிர்ந்த மூதறிஞர்கள் பலர் இருக்க, சைவ சித்தாந்த பெருமன்றத் தலைவரும், மஹா தேஜோ மண்டல சபைத் தலைவருமான பாம்பன் - வாரியார் அடிப்பொடி திரு. செ.வே. சதாநந்தன் ஐயா அவ்கள் அடியேனுக்கு நூல் எழுத வாய்ப்புத் தந்தது எல்லாம் வல்ல சிவபெருமானின் கருணை எனப் போற்றுகின்றேன். இந்நூன்முகம் இந்நூலுக்கு ஒரு நுழைவாயிலாகும்.

இங்ஙனம்
முனைவர் **கோமதி சூரியமூர்த்தி**

**‘‘எனக்குச் சாஸ்திரத்தில் நிச்சய புத்தியும், இதுதான் உண்மை பொருள் என்ற திண்மை நலமும் அவர் (ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்) நூல்களைப் படித்ததனால் உண்டாயின. அவருடைய நூல்கள் ஆறு காண்டங்களாகும். இதில் பரிபூரணானந்தபோதம் என்ற நூல் பதினாங்கு சித்தாந்த சாஸ்திரக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.**

**தகராலய ரகசியம் என்ற நூல் அவருடைய அனுபவமாகிய தகர வித்தையை விளக்குவது’’**

**– திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

உ

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசர் பாடல்களில் திருஞானசம்பந்தரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும்



## பாம்பன் சுவாமிகள் திருஞானசம்பந்தரைப் போற்றுதல்

''பிள்ளையார் முதல் நால்வர் தம் திருமுறைகள் பெரிதும்
உறுதி என்பதற்கு அவை பெருமான்
வள்ளில் அமுதென ஏறிய அனேக மகிமை விளைத்தன''
(5. திருப்பா, 2ஆம் புத்தகம், 93, வல்லுநர், செ. 4)

திருஞானசம்பந்தரின் பாடல்கள் உயிர்கட்குப் பெரிதும் உறுதி பயப்பவை. அத்திருமுறைகளின் பாட்டுக்கள் சிவபெருமானின் திருச்செவியில் அமுதம் என நிறைந்து அனேக அற்புதச் செயல்களை விளைவித்தமையே சான்றாகும் என பாம்பன் சுவாமிகள் சம்பந்தரைப் போற்றுகின்றார். (5. திருப்பா, 2 ஆம் புத்தகம் செ. 4)

சம்பந்தரைச் சமணர்கள் சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் செய்ய அழைத்தபோது, அவர் திருவருளை நினைந்து வணங்கி தெய்வீகத் தமிழ்ப் பதிகம் பாடி மூன்று வாதங்களிலும் வென்று சிவபெருமானே செம்பொருள், சைவமே மேன்மை வாய்ந்த சமயம் என்பதை தெளியச் செய்தார். இவ்வாறு சமணர்களை வாதில் வென்றமையால் சுவாமிகள் அவரை **''அமண சிங்கம்''** (அமணரை வாதில் வென்ற சிங்கம்) எனப் போற்றுகின்றார் (1.16 நிட்களானந்த குகன், செ. 6).

## பாம்பன் சுவாமிகள் தம் நூல்களில் திருஞானசம்பந்தர் ஆற்றிய அற்புதங்களை எடுத்துக் கூறல்

1. திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டது (5 திருப்பா, 2ஆம் புத்தகம், 19 நினைத்தால் என் பிறப்பறுத்திடும், செ. 5.)
2. திருமறைக்காட்டில் கோயில் கதவம் அடைக்கப் பாடியது. (i) முற்கூறிய நூல், செ. 6, (ii) 2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 35. மிகைவெல் வயவை, செ.3)
3. திருச்செங்கோட்டில் சுரநோய் தீர்த்தது (5. திருப்பா 2ஆம் புத்தகம், 19. நினைத்தால் என் பிறப்பறுத்திடும், செ. 5
4. கொல்லி மழவன் மன்னன் மகளின் முயலகன் நோய் தீர்த்தது. (மேலது செ. 5)
5. திருமருகலில் இறந்த வணிகனை உயிர்ப்பித்தது (5. திருப்பா, 2,19 நினைத்தால் என் பிறப்பறுத்திடும், செ. 6)
6. கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தது (5. திருப்பா, 2.19. செ. 7)
7. தமிழ்ப் பதிக ஏடு நெருப்பில் இட்டு கருகாமல் இருக்கும் படிச் செய்தது. (i) 5 திருப்பா, 2.17. செ. 7, (ii) 2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 35. மிகை வெல் வயவை, செ. 3)
8. திருப்பாசுர ஏடு ஆற்று நீரை எதிர்த்துச் செல்லுமாறு செய்தது. (i) 5. திருப்பா, 2, 19, செ. 7, (ii) 2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 35. செ. 3)
9. பூம்பாவையை உயிர்ப்பித்தது (5. திருப்பா, 2.19. செ. 8)
10. ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியது. ((i) 5. திருப்பா, 2.19. செ. 7, (ii) 2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 35. செ. 3)
11. புத்த நந்தியின் தலையை இறுத்தது. (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 35. செ. 3)
12. திருமணத்தின் போது அனைவரும் சோதியில் கலந்தது. (i) 5. திருப்பா, 2.19. செ. 8, (ii) 5. திருப்பா, 2.89. பொன்னின் நான்மறை, செ. 7)

## பதிகப் பொருளமைப்பு ஒப்புமை

திருஞானசம்பந்தர் திருவைந்தெழுத்தின் சிறப்பை உணர்த்தி

பஞ்சாக்கரப்பதிகம் (3: பதிக எண், 22,49) என இரு பதிகங்கள் பாடியருளியுள்ளார்.

பாம்பன் சுவாமிகளும் ஆறெழுத்தின் சிறப்பை உணர்த்தி ஆறெழுத்து உண்மை என இரு பதிகங்கள் பாடியுள்ளார் (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், பதிக எண்கள் 6,7)

''துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்'' என்று தொடங்கும் திருஞானசம்பந்தரின் பதிகம் (3: பதிக எண், 22) பாடல் இறுதி தோறும் ''அஞ்செழுத்துமே'' என்று முடிவதால் அது பஞ்சாக்கரப் பதிகம் எனப்படும். அஞ்செழுத்தைச் செபிப்பது கூற்றை விரட்டும் (3:22:1). பொதுவாக வேதியர்கள் ஓதுவது காயத்திரி மந்திரம். ஆனால் திருஞானசம்பந்தர் இப்பதிகத்தில் வேதியர்கள் காலை, நண்பகல், மாலை என்ற மூன்று சந்தியாக் காலங்களிலும் செபிக்க வேண்டியது திருவைந்தெழுத்தே என்கின்றார் (3:22:2). துன்பங்களை நீக்குவது (3:22:3). மரணதறுவாயிலும் துன்பத்தைப் போக்குவது (3:22:4) இம்மையிலும், மறுமையிலும் எல்லா நலன்களையும் தருவது (3:22:6) என்றெல்லாம் பலவாறு அஞ்செழுத்தை ஓதுவதால் ஏற்படும் நலன்களைக் கூறுகின்றார்.

''காதலாகிக் கசிந்து'' என்று தொடங்கும் பதிகம் (3:49ஆம் பதிகம்) பாடல் இறுதிதோறும் ''நமச்சிவாயவே'' என்று முடிவதால் நமச்சிவாயப் பதிகம் எனப்படும். சிவபெருமானின் திருநாமங்களுள் ஒன்று நமச்சிவாய (3:49:1-11) என சிறப்பித்துக் கூறுகின்றார்.

சுவாமிகள், இம்மையில் நன்மைகளையும், மறுமையில் பேரின்ப முக்தியையும் தருவது 'சரவணபவ' என்னும் மகா மந்திரம் ஆகும் (2.6.2) என்கின்றார். சரவணபவ என்னும் மந்திரத்தை ஓதுவது இவ்வுலகிலேயே பரப்பிரம வாழ்வைத் தரும் (2.6.3). அடியவர்களைக் காப்பது சரவணபவ மந்திரம் (2.6.4). ஓதுபவர்களின் துன்பத்தைப் போக்குவது சரவண மந்திரம் (2.6.5). சஞ்சலம் தவிர்ப்பது (2.6.6). சங்கடம் தீர்ப்பது (2:6:7). நற்றுணையாவது (2.6.8). சாவினைத் தடுப்பது (2:6:9) அபயம் அளிப்பது (2:6:10) என்றெல்லாம் சரவணபவ மந்திரம் ஓதுவதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் திருநீற்றின் சிறப்பை விளக்கித் திருநீற்றுப் பதிகம் பாடியுள்ளார் (2: பதிக எண். 66). பாம்பன் சுவாமிகளும் திருநீற்றின் சிறப்பை உணர்த்தி வைதிக திருநீற்று வண்மை விளக்கம் பாடியுள்ளார். (1.71 தேர்ந்தேனே என் கண்ணி, 83-90)

திருஞானச்சம்பந்தர்

''வானவர் மேலது நீறு'' (2:6:1)

''முனிவர் அணிவது நீறு'' (2:66:3)

''பூச இனியது நீறு'' (2:66:5)

''மேலது தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு'' (2:66:5)

''பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு'' (2:66:4)

என்று திருநீறு பூசுவது பற்றியும், அதன் பெருமையையும் உணர்த்துகின்றார்.

சுவாமிகள்,

''வீட்டு அகத்தில் சாணி மெழுகி நலம் செய்தல் ஒக்கும்
சேட்டம் அறை நீறு நிமிர்தல் என்றும் தேர்ந்தேனே''
(1.71. தேர்ந்தேனே என் கண்ணி, 83)

என்கின்றார். பழங்காலத்தில் வீட்டினைச் சாணத்தினால் மெழுகுவர். ஏனெனில் அது கிருமிகளை அழிக்க வல்லது; நன்மை தருவது. அதுபோல உடம்பில் திருநீறு பூசுவது தூய்மையையும் நன்மையையும் தரும் என்கின்றார்.

''போதம் தருவது நீறு'' (2:66:2) திருநீறு பூசுபவர்கள் **ஞானமாகிய சிவஞானத்தைப் பெறுவர்** என்று திருஞானசம்பந்தர் கூறுவது போல, சுவாமிகள்

''சாத்துவிக மெய்ஞ்ஞானம் தான் வளர்ப்பான் அக்கினியில்
பூத்த திருநீற்றை நனிபூசல் என்றும் தேர்ந்தேனே''
(1.71. தேர்ந்தேனே என் கண்ணி, 87)

அக்கினியில் தோன்றிய திருநீற்றை நன்கு பூசிக்கொள்ளுதலே **சாத்துவிக மெய்யறிவை ஒருவன் வளர்க்கத் துணைபுரியும்** என்று தெளிந்தேன் என்கின்றார்.

''வெந்துயர் தீர்ப்பது நீறு'' (2:66:2)

''ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு'' (2:66:9)

(ஏல உடம்பு இடர் தீர்த்தல் - நோய் நீக்குதல்) என்று திருஞானசம்பந்தர் கூறுவது போன்று, சுவாமிகள்,

''உற்ற பிணி தீர்ப்பான் உரியோர்க்கு அருமருந்தும்
அற்றம் அற்றே வெண்ணீறே ஆகும் என்று தேர்ந்தேனே''
(1.71. தேர்ந்தேனே என் கண்ணி, 88)

என்று கூறுகின்றார்.

**கருத்தொப்புமைகள்**

மெய்யுணர்வு பெற்றவர்கள் இறைவனைப் பற்றிய பேச்சு அல்லாமல் வேறு பயனில்லாத வீண்பேச்சுப் பேச மாட்டார்கள், திருஞானசம்பந்தர்,

''**பெற்றம் அமரும் பெருமானை அல்லாமல் பேசுவது
மற்றோர் பேச்சிலாமே**'' (1:5:9)

என்று கீழைத்திருக்காட்டுப்பள்ளிப் பதிகத்தில் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகளும்,

''**பேசும் பேச்செல்லாம் உன் பேச்சா இருக்கும் எனின்
பாசம் அறும் அன்றோ கண் பாராய் சதாசிவமே**''

(1.70. சதாசிவக்கண்ணி, 37)

என்று கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர்,

''**செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே**''
(1:80:5)

என்று கோயில் திருப்பதிகத்தில் கூறுவது போன்று,
பாம்பன் சுவாமிகளும்,

''**நிலம் பொன் பவுள்சு எதற்கு நின்னை நினைத்தே
புலம்பும் பவுள்சு எனக்குப் போதும் பரஞ்சுடரே**''
(1:67 பரஞ்சுடர்க்கண்ணி, 91)

என்று கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் சிவனடியார்கட்கு நாளும் கோளும் தீமை செய்யா நன்மையே செய்யும் என கோளறு பதிகத்தில் உணர்த்துகின்றார் (2:பதிக எண், 85). பாம்பன் சுவாமிகளும், இறைவனின் இரு திருவடிகளை வணங்கி அருள் பெற்றவர்கட்கு மாதம், இராசி, திதி, வாரம், எழுநாள், கோள் என (எவற்றாலும் தீமை)

இல்லை என அறிவில் உணர்த்துவாயாக என நெஞ்சிற்கு உணர்த்துகின்றார். (1.47 நெஞ்சப்பத்து, செ. 7).

'' **திருஞானசம்பந்தரின் வாக்கை அப்படியே எடுத்தாளல்**
**கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்**''

(3:40:3)

என்ற திருஞானசம்பந்தரின் அருள் வாக்கை, பாம்பன் சுவாமிகள்,

**''கல்லா நெஞ்சினில் கர்த்தன் என் ஈசுரன்**
**நில்லான்''** (5. திருப்பா, 2ஆம் புத்தகம், 75. நிலத்தில் பன்மத சாத்திரம், செ. 4)

என்று எடுத்தாண்டுள்ளார்.

## திருஞானசம்பந்தரின் பாடல் அல்லது பாடல் தொடர்களை மேற்கோளாக எடுத்தாளல்.

### சிவனே தனி முதல் நாயகன்

பாம்பன் சுவாமிகள் ஐம்முகச் சிவனையே அறுமுகச் சிவனாகக் கருதி ஏக தெய்வ வழிபாடு செய்தவர். அவர் பல பிரிவு சைவர்கட்கும் தனிமுதல் நாயகனாக விளங்குபவன் அவன் என்பதை அனுபூதியால் உணர்ந்து கொண்டதாகக் கூறும் பாடலில், திருஞானசம்பந்தர் பாடிய ''பங்கம்'' எனத் தொடங்கும் சண்பை நகர்த் திருப்பதிகத்தின் நான்காவது பாடலைத் தம் கருத்துக்கு, அரணாகக் காட்டுகின்றார். (5 - திருப்பா, 2ஆம் புத்தகம், 89. பொன்னின் நான்மறை, செ. 6)

''தோணியூர் முனி ''பங்கம்'' என் மொழியால் தொடங்கும்
ஓர் பதிகத்துறு நான்கும்
..................
சைவருக்கும் கோணில் பாசுபதருக்கும் மிக்குரிய கோ
என்று உனை அறிந்தேன் பரசிவமே''
(5. திருப்பா, 2ஆம் புத்தகம், 89. பொன்னின் நான்மறை, செ. 6)

''மொய்வல் அசுரர் தேவர் கடைந்த முழு நஞ்சது உண்ட
தெய்வர் செய்ய உருவர் கரிய கண்டர் திகழ் சுத்திக்
கையர் கட்டங்கத்தர் கரியின் உரியர் காதலாற்
சைவர் பாசுபதர் வணங்கும் சண்பை நகராரே'' (1:66:4)

என்பது சம்பந்தரின் பாடல் ஆகும்.

## பரம்பொருளுக்குரிய நாமங்களுள் ஒன்று பசுபதி

ஒப்பற்ற பரம் பொருளுக்கு பல நாமங்கள் உண்டு என்பதை உணர்த்தும் பாடலின் உரை விளக்கத்தில் பரமபதி, பசுபதி என்றும் அழைக்கப்படும் என்று கூறி, அதற்கு அரணாக,

''பண்ணார் பாடல் ஆடல் அறாத **பசுபதி** ஈசன் ஓர் பாகம்
பெண் ஆண்ஆனாய வார்சடை அண்ணல் பேணு பெருந்துறையே''

என்ற திருஞான சம்பந்தரின் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார். (பரிபூரணானந்த போதம், பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 3ன் உரை)

அதே பாடல் உரையில், ''சிலர் அழித்தல் தொழில் மட்டும் ஆற்றும் உருத்திரனைச் சிவனாகக் கருதி மயங்குபவர். உருத்திரன் திரிமூர்த்திகளில் ஒருவன் அவன் அணுபட்சத் தெய்வம். அத்தகைய உருத்திரர் பலர்'' என்பதை அறிவுறுத்த,

''உருத்திர பல் கணத்தார்க்கு - அட்டிட்டல் காணாதே
போதியோ பூம்பாவாய்'' (2:47:1)

''நல்வினைப் பயன் நான்மறையின் பொருள்
கல்வியாய கருத்தன் உருத்திரன்
செல்வன் மேய திருமழபாடியை'' (3:48:செ.5)

என்ற ஞானசம்பந்தர் பாடலடிகளை மேற்கோள்களாகக் காட்டுகின்றார்.

## சிவாகமங்களை அருளிச் செய்தவர் சிவன்

''சீரிய திருவிற்கோல அம்பதிகத்தே இருமூன்றினும் ஒற்றி
ஊரின் அப்பதிகம் பத்தினும் பொழில் ஓர் ஓங்கு
கோகரணம் ஆறினும் மா
ஆரியன் ஞானப் பாலறாவாயன் ஆகமச் சிறப்பு
எடுத்து அதிர்த்த
காரியம் தேராது உளறுநர்க்கு யாது கழறுவேன்
என் குருமணியே''
(5, திருப்பா, 2ஆம் புத்தகம், 34. குருமணி, செ. 3 (இருமூன்று-ஆறு)

''முத்தமிழ்க் கடல் ஞான சம்பந்த முனிவரின்
திருவிற்கோலத்துப்
பத்தில் ஓர் ஆறினும் பல இடத்தும் பழமறை ஆகமம் அரனால்
வித்தக வசனம் என்னவும்''

(5. திருப்பா II. 34. குருமணி, செ. 6)
(இப்பாடலில் பத்து என்பது பதிகத்தைக் குறிக்கும்)

வேதம் சிவாகமங்கள் இரண்டுமே இறைவனின் திருவாக்குக்களால் ஆகிய முதல் நூல். ஆகமச் சிறப்பை உணர்த்த முற்பட்ட பாம்பன் சுவாமிகள் தம் கருத்திற்கு அரணாக திருஞானசம்பந்தரின் திருவிற்கோலத் தலப்பதிகத்தின் 6வது பாடலையும், திருவொற்றியூர்ப் பதிகத்தின் 10ஆவது பாடலையும், திருக்கோகர்ணம் பதிகத்தின் 6ஆவது பாடலையும் மேற்கோளாகச் சுட்டிக் காட்டிப் பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தரின் அப்பாடல்கள் பின்வருமாறு :

''தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூகம் மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற்கோலமே''
(3:23:6)

''ஆகமச் செல்வனார்'' (3:57 திருவொற்றியூர்ப் பதிகம், செ.10)
''ஆறு சமயங்களும் விரும்பியபடி பேணி அரன் ஆகமம் மிகக் கூறு மனம்''

(3:79. திருக்கோகர்ணப்பதிகம், செ. 6)

## சிவம் உயிர்கட்குள் உயிராய் உள்ளது

பாம்பன் சுவாமிகள் குரு சீடனுக்கு, ''சிவம் உனக்குள்ளேயே இருக்கின்றது. அதனைக் காண நீ வெளிமுகமாய் எவ்விடத்தும் செல்லவேண்டாம்'' என்று அறிவுறுத்தும் பாடலின் உரை விளக்கத்தில்,

''கானப்பேர் உள்ளமே கோயிலா உள்கும் என் உள்ளமே''
(3:26:6)

''எண்ணொன்றி நினைந்தவர் தம் பால்
உண்ணின்று மகிழ்ந்தவன் ஊராம்
..... பனையூரே'' (1:37:2)

என்ற திருஞானசம்பந்தர் பாடலடிகளை மேற்கோள்களாகக் காட்டுகின்றார் (பரிபூரணானந்தபோதம், துறவற விளக்கப் பாடல் 86இன் உரை)

## பதியைப் போல பசுவும் பாசமும் அனாதி

பரிபூரணானந்த போத நூலில் பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம் செ. 8, இல் ''பதியைப் போல பசுவும் பாசமும் அனாதி'' என்பதற்குத் திருஞானசம்பந்தரின்,

''விளையாத தொர் பரிசில் வரு பசு பாச வேதனை ஒண்
தளையாயின தவிர் அவ்வருள் தலைவனது சார்பாம்'' (1:12:3)

என்ற பாடலடிகளை அவ்வுரை விளக்கத்தில் மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## பரம்பொருளின் தன்மை

பரம்பொருள்,

''சிற்ககன வெளியாகி ஒளியாகி நிறைய
திவ்விய சுப்பிரமணியமே''

(5. திருப்பா, முதல் புத்தகம், 3. திவ்விய சுப்பிரமண்யம், செ.8)

என்று கூறும் பாம்பன் சுவாமிகள், அப்பரம்பொருள் அளவையுள் படாதவன். தருக்கத்தினால் இந்நீர்மையன் என நிச்சயிக்கப்படாதவன் என விளக்கி, தம் கருத்துக்கு அரணாக,

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி''
(3:54:5)

என்ற ஞானசம்பந்தரின் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார் (5. திருப்பா, முதற்புத்தகம், திட்பம் என்னும் உரை)

## மனிதப் பிறவியின் நோக்கம்

''ஊனடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்''
(திருத்தொண்டர் புராணம், பாயிரம், செ. 2)

என்பது சேக்கிழார் வாக்கு. அவ்வுறுதியாவது சிவ வழிபாடு செய்து சிவப்பேரின்பம் துய்த்தலே. பாம்பன் சுவாமிகள் பரிபூரணானந்த போதம் என்ற நூலில் துறவற விளக்கப் படலத்தில், ''இன்றிருக்கின்றவர் நாளையும் இருப்பர் என்றெண்ணுவதற்கு உறுதிப்பாடு யாதுளது? முன்னைப் பிறவிகளில் செய்த

தவப்பயனால் இப்பிறவி வாய்த்துள்ளது. அதை வீணாகக் கழியாது இறைவனைத் தியானிக்கவேண்டும் என அறிவுறுத்தும் பாடலில் (செ. 31) தம் கருத்துக்கு அரணாக,

''இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே''
(2:99:1)

என்ற ஞானசம்பந்தரின் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார் (பரிபூரணானந்த போதம், சிவசூரியப்பிரகாச உரை, செ. 8)

## பரம்பொருளை வழிபடுதல்

நடராசப் பெருமானை நினைந்து கண்அன்பினால் உருக வேண்டும் என்பதைச் சுவாமிகள் அவ்வாறு உருகாத கண்ணைப் பழிப்பதன் மூலம் உணர்த்துகின்றார்.

(தகராலய ரகசியம், முதலாம் காண்டம், செ. 33)

தம் கருத்திற்கு அரணாக, அதன் உரை விளக்கத்தில்,

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது'' (3:49:1)

''வணங்கி நைபவர்க்கு அல்லால் வந்து கை கூடுவது அன்று
நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே'' (2:90:9)

என்ற ஞானசம்பந்தரின் பாடலடிகளை உடன்பாட்டு முறையிலும், எதிர்மறை முறையிலும் மேற்கோள்களாகக் காட்டுகின்றார்.

## மனத்தால் சிந்தித்தல்

''சாற்று நற் சச்சிதானந்தமாய் உள்ள சிவ
சாமியைச் சிந்தை செய்வோம்''
(5. திருப்பா, முதற்புத்தகம், கடவுள் வணக்கம்)

என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். இப்பாடலின் உரை விளக்கத்தில் பந்தத்திலிருந்து விடுபடவேண்டுமாயின் உயிர்கள் சிவனைச் சிந்தித்து வழிபடவேண்டும் என்பதை அறிவுறுத்த,

''...... சிற்றம்பலம் மேய
கருமான் உரியாடைக் கரைசேர் கண்டத்து எம்
பெருமான் கழல் அல்லால் பேணாது உள்ளமே''
(1:80:6)

என்ற ஞானசம்பந்தரின் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## திரிகரணங்களால் வழிபடுதல்

தகராலய ரகசியம் இரண்டாம் காண்டம் 52 ஆம் செய்யுளின் உரையில் பாம்பன் சுவாமிகள், ''உலக விவகாரங்களில் நிற்கும் மாந்தர்களுள் விவேகியாயுள்ளார், கடவுளையும் கடவுட் பேறுடையாரையும் தொழுது நிற்றல், கைங்கரியம் செய்தல் முதலிய நற்கருமங்களால் காயத்தால் செய்த பாவத்தையும், கடவுளைத் துதித்தல், கடவுளது திருநாமத்தைச் செபித்தல் முதலியவற்றால் வாக்கால் செய்த பாவத்தையும், கடவுளைத் தியானித்தலால் மனத்தால் செய்த பாவத்தையும் நீக்கிக் கொள்வர். இவ்வாறு நாளும் திரிகரணங்களால் வழிபடுவோர் தூய்மையாளர் ஆவர் என்பது திண்ணம்'' என அறிவுறுத்தி, இதற்கு அரணாக,

''உரையினில் வந்த பாவம் உணர்நோய்கள் உம்ம
செயல் தீங்கு குற்றம் உலகில்
வரையினில்லாமை செய்த அவை தீரும் வண்ணம்
மிக ஏத்தி நித்த நினைமின்'' (2:86:1)

என்ற ஞானசம்பந்தரின் பாடலடிகளை மேற்கோள் காட்டி

உரையினில் வந்த பாவம் - வாக்கினாலுற்ற பாவம்
உணர் நோய்கள் - மனத்தினாலுற்ற பாவம்
செயல் தீங்கு - காயத்தினாலுற்ற பாவம்

என விளக்கிக் கூறியுள்ளார்.

## நாம மந்திரம் செபித்தல்

முருகப் பெருமானின் நாம மந்திரத்தை குரு மூலம் உபதேசமாகப் பெற்று, விதித்த காலங்களில் உள்ளத்திற்குள் செபித்து வரினும், அவ்வண்ணமே சிவமந்திரமான திருவைந்தெழுத்தைச் செபிக்கினும் சீவ போதமானது பக்குவ விசேடத்திற்கேற்ப ஒரு காலத்தே ஒடுங்கும். பாவம் அறும். குற்றமற்ற ஞான மார்க்க நிலை கூடும் என்கின்றார் பாம்பன் சுவாமிகள் (பரிபூரணானந்த போதம், துறவற விளக்கப் படலம், செ.

95). அதன் உரை விளக்கத்தில்,

''செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ....
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே'' (3:22:4)

என்ற திருஞானசம்பந்தர் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## ஞானமே வீடுபேறு தரும்

ஞானமே வீடு பேற்றைத் தரும். சிவஞான யோகம் ஞானம் பெறுவதற்கு வழிகாட்டும் எனக் கூறும் பாம்பன் சுவாமிகள்,

**''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்**
**ஞான விளக்கினை ஏற்றி** நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே'' (3:22:3)

என்ற ஞானசம்பந்தரின் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார் (பரிபூரணானந்த போதம், சிவசூரியப்பிரகாச உரை, செ. 28).

## இலக்கணக் குறிப்பில் ஞானசம்பந்தர் பாடலடியை மேற்கோள் காட்டுதல்

பஞ்ச கருத்தர்களைப் பற்றிய விளக்கப பாடலில் சுவாமிகள் அஞ்சு என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். உரை விளக்கத்தில் **அஞ்சு என்ற சொல் ஐந்து என்பதன் இலக்கணப்போலி ஆயிற்று** என்று கூறி, அதற்கு அரணாக,

''அல்லல் கெடுப்பன அஞ்சு எழுத்துமே'' (3:22:4)

என்ற ஞானசம்பந்தரின் பாடலடியை மேற்கோளாகக் காட்டுகின்றார் (பரிபூரணானந்த போதம், சிவசூரியப்பிரகாச உரை, செ. 18).

## சொல்லாட்சியில் திருஞானசம்பந்தரின் பாடற்சொல்லை மேற்கோள் காட்டுதல்

### அவத்தம் - பயனற்றது - உறுதியற்றது.

தட்சணாமூர்த்தியின் சின்முத்திரை சைவ சித்தாந்தம் கூறும் அத்துவித முக்தி நிலையை சொல்லாமல் சொல்கின்றது. வாயாற் கூறப்படாத இந்த மௌனார்த்தம் அன்றிப் பிற மதங்கள் கூறும் முக்தி பற்றிய கொள்கைகள் பயனற்றவை என்பதைச் சுவாமிகள்,

''இம்முக அர்த்தம் அல்லாது இசைக்கும்
எல்லாம் **அவத்தம்** மகனே''
(பரிபூரணானந்த போதம்,
பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 107)

என்கின்றார். இங்கு **''அவத்தம்''** என்ற சொல் பயனற்றது - உறுதியற்றது என்று பொருள்படும். இப்பாடலின் உரை விளக்கத்தில் சுவாமிகள், இதற்கு அரணாக,

**''அறிவிலாத அமணர் சொல் அவத்தம் ஆவது அறிதிரேல்''**

என்ற ஞானசம்பந்தரின் பாடலடியை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

**ஏய்தல் – பொருந்துதல், சார்தல்**

''யோக மார்க்கத்தில் நின்று பரமுக்தியில் பிரவேசிக்க மார்க்கம் இல்லை. சாரூபத்தைத் தான் சார்வாய்'' என்று பாம்பன் சுவாமிகள் குரு சீடனுக்கு அறிவுறுத்துவது போல், **''சாரூபம் ஏய்வை''** (பரிபூரணானந்த போதம், துறவற விளக்கப் படலம், செ. 15) என்கின்றார். இங்கு ஏய்வை - ஏய்தல் - பொருந்துதல் என்ற பொருளில் வந்தது.

இச்சொல் இப்பொருள் பயப்பதற்கு அரணாகச் சுவாமிகள் அப்பாடலின் உரை விளக்கத்தில்,

''வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை'' (1:128 வரி, 30)

என்ற திருஞானசம்பந்தரின் பாடலடியை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

உ

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் பாடல்களில் திருநாவுக்கரசரின் வரலாற்றுக் குறிப்புக்களும், சிந்தனைகளும்.



### திருநாவுக்கரசரின் வரலாற்றுக் குறிப்புக்கள்

### நாவுக்கரசர் கயிலையிலிருந்து இப்பூவுலகிற்கு வந்தது

சைவ சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் வழிபாட்டின் பலன்கள் முறையே சாலோகம் (இறை உலகை அடைதல்), சாமீபம் (இறைவனுக்கு அருகிலிருத்தல்), சாரூபம் (இறைவனைப் போன்ற உருவம் பெறுதல்), சாயுச்சியம் (வீடுபேறு) எனக் கூறும். இவற்றுள் சாயுச்சியமே பிறவா நெறியைத் தரும். ஆதலால் அது நிலையான வீடுபேறு ஆகும். ஏனைய முக்தி பெற்றவர்கள் சில சமயம் இறைவனின் ஆணையால் மீண்டும் இப்பூவுலகில் பிறக்க நேரிடும். சுவாமிகள்

''அப்பருஞ் சுந்தரரும் அக்கயிலை நின்றிழிந்தே
இப்புடவி வந்து கண்டார் எம்மான் பரஞ்சோதி''
(3. காசி யாத்திரை, செ. 326)

என்று திருநாவுக்கரசர் கயிலையிலிருந்து இப்பூவுலகிற்கு வந்ததைக் குறிப்பிடுகின்றார். (நாவுக்கரசர் முற்பிறவியில் கயிலையில் வாகீச முனிவராய்த் தவம் செய்துகொண்டிருந்த போது, சிவ அபராதம் பெற்ற இராவணனின் அழுகுரலைக் கேட்டு அவனுக்கு உய்யும் வழி கூறியதால் (தவத்திலிருந்து நீங்கி), மறு

பிறவியில் இப்பூவுலகில் வந்து பிறந்தார் என்று பெரிய புராணத்தில் சேக்கிழார் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது).

‘‘சுடு நீற்றறையிருந்து இறுமாப்பொடு கொள் நஞ்சுண்டு
எண்ணலார் விடு குஞ்சரம்
அன்பொடு போற்றிடு வியனதை ஏற்று அலைகடல்
உழிக்கல்லெறுழ்மிதந்திட ஏறிக்
கடுவாற் கழிவடைந்தவன் மீட்டும் எழ மெய்காட்டோர்
அரசு கடாட்டியமும்
நெடுமாட்சி இறைவன் அருள் மஞ்சே அது நினைத்தால்
என் பிறப்பறுத்திடுமே’’
(5. திருப்பா. 2ஆம் புத்தகம், 19.
நினைத்தாலே என் பிறப்பறுத்திடும், செ. 9)

**இப்பாடலிலிருந்து அறியப்படும் நாவுக்கரசரின் வரலாற்றுக் குறிப்புக்கள் பின்வருமாறு:**

1. நீற்றறையில் இடர்ப்பாடின்றி இருந்தது.
2. நஞ்சினை உண்டும் பிழைத்திருந்தது.
3. கொல்வதற்காக ஏவப்பட்ட மதயானை அவரைப் பணிந்து வணங்கியது.
4. கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்தது.
5. அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பித்தது போன்ற அவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதச் செயல்களை எடுத்துரைத்து அதற்கு ஆறுமுகச் சிவனின் அருள் வல்லமையே காரணம் என்கின்றார். (ஐம்முகச்சிவனும் ஆறுமுகச் சிவனும் வேறில்லை)

## நாவுக்கரசர் பெற்ற முக்தி

சுவாமிகள் அருளாளர்கள் பலர் பெற்ற முக்தி நிலையைக் குறிப்பிட்டு, தனக்கு எத்தகைய முக்தி வாய்க்குமோ என முருகப் பெருமானிடம் பிரார்த்திக்கும் பாடலில், ‘‘சிவலிங்கமூர்த்தியில் கலந்து முக்தி பெற்றவர் ஆளுடைய அரசு’’ எனக் குறிப்பிடுகின்றார் (1.6. நிட்களானந்த குகன், செ. 6).

**‘‘எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ’’** என்று தொடங்கும் பதிகம் பாடி, புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே’’ என்று பாடியதும், (6: பதிகம்

99), **''நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலாரின் சேவடிக் கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்''** (நாவு. புராணம், செ. ....) என்றுசேக்கிழார் கூறியதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

## நாவுக்கரசரின் முதுமையையும் அறிவையும் போற்றுதல்

சமயாச்சாரியார்கள் நால்வர்களுள் வயது முதிர்ந்து 81 வயது வரை வாழ்ந்தவர் நாவுக்கரசர் அவரைச் சுவாமிகள் **''முதுக்குறைவு விஞ்சும் அப்பர்''** என அகவையிலும், அறிவிலும் முதிர்ந்தவர் எனப் போற்றுகின்றார் (1.8. திருவிராமேச்சுரம், செ. 8)

## பதிகப் பொருள் ஒப்புமை

திருநாவுக்கரசர் தம் உறுப்புக்களெல்லாம் இறைவழிபாட்டிற்கே பயன்படுத்தப்படவேண்டும் என்பதை உணர்த்தி **திருஅங்கமாலைப் பதிகம்** (4 : பதிக எண் 9) பாடியுள்ளது போல, சுவாமிகள் **திருஅங்கப்பேறு** என்ற பதிகம் பாடியுள்ளார். (2. திருவலங்கல் திரட்டு, முதலாம் கண்டம், 27. அங்கப்பேறு)

திருநாவுக்கரசர் அப்பூதியடிகள் மகனின் விடம் தீர்க்க, **''ஒன்று கொலாம்''** என்று தொடங்கும் பதிகம் (4 : பதிக எண், 18) எண்ணல் அலங்கார முறையில் பாடியுள்ளது போல சுவாமிகள் திருவலங்கல் திரட்டில் முதற்காண்டம் 45ஆம் பதிகம், **''ஒன்றாம் அவர் ஓதிய ஆதிமுகம்''** என்று தொடங்கும் எண்ணலங்கார லகரி பதிகம் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் அறுமுகச் சிவன் மீது போற்றித் திருத்தாண்டகம் பாடியுள்ளார் ( 6 : பதிகம் எண் 55, 56, 57). சுவாமிகள் போற்றி விண்ணப்பம் (1.50) என்று ஒரு பதிகம் பாடியுள்ளார்.

## பாடல் கருத்தொப்புமைகள்

திருநாவுக்கரசர் கோயில் பெரிய திருத்தாண்டகத்தில் பாடல் இறுதிதோறும், **''பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''** (6:1 செ. 1-10) என்று கூறுகின்றார். சுவாமிகளும் **''பேசா நாட்கள் பிறவா நாட்களே''** (4 : ஞானவாக்கியம் 89) என்கின்றார்.

திருநாவுக்கரசர் தனித் திருத்தாண்டகத்தில் ஐம்முகச் சிவனை,

''அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ

ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ''

எனப் போற்றுகின்றார். சுவாமிகள் கூறும்,

''பெற்றார் நீ பிறந்தார் நீ பேணுவார் நீ
பேசரிய அன்புளர் நீ பிரிவில்லார் நீ
உற்றார் நீ உரியார் நீ''

4. குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, செ.3) என்ற பாடலடிகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

**''வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை''** (6:19:8)

என்று திருநாவுக்கரசர், ''அடியார்களுடைய வாயுள்ளும் மனத்துள்ளும், மனத்தில் தோன்றும் எண்ணத்துளும் தங்கி, அவர்களுடைய விருப்பங்களைச் சிவபெருமான் நிறைவேற்றுவான்'' என்று சிவபெருமானைப் போற்றுகின்றார்.

சுவாமிகளும்,

''நினைப்பவர் நினைப்பினின்றும் நினைப்பது முடிக்கும்'' (4. குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, செ. 7)

என்று அறுமுகச்சிவனைப் போற்றுகின்றார்.

''பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே'' (5:90:5)

என்று இறைவனை மலரிட்டு வழிபடாது, புகழாது, உடம்பை வளர்க்க உணவு தேடி அலைபவர்கள் இறுதியில் காக்கைக்கு உணவாவர் என வழிபாடு செய்யாதவர்களின் நிலையைக் கூறுகின்றார்.

சுவாமிகள் அக்கருத்தை உள்ளடக்கி,

''இரை தேடுவதோடு இறைவனையும் தேடு''
(4:கந்தகோட்ட மும்மணிக்கோவை, செ. 27)
என அறிவுறுத்துகின்றார்.

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்

மங்குவோர் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லாராகில்
அங்கமெலாங் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''
(6:95:10)

என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

சுவாமிகளும் திருப்பா 2 ஆம் புத்தகம் 77வது பதிகம் ''புவனமீது பன்மரபினார்'' என்ற பதிகத்தின் 9வது பாடலில், ''பரமேசுவரனிடம் அன்பு இல்லாதவர்களின் செல்வத்தையும், அவ்வாறு இல்லாத தேவர்களையும் நாம் மதிக்க மாட்டோம். குறைகளும் துன்பங்களும் உடையவராகி, பசுவை உரித்துத் தின்னும் புலையர்களாக இருப்பினும் அவர்கள் சிவபெருமானுக்குரிய அன்பர்கள் எனில் அவர்களே நாம் வணங்கும் கடவுளாவார்'' என்று திருநாவுக்கரசர் கூறியதைக் குறிப்பிடுகின்றார்.

## இறையருளால் வினை தீர்தல்

''விண்ணுற அடுக்கிய விறகின் வெவ் அழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே''
(4:....:3)

ஒரு சிறு தீக்குச்சி வானளாவ அடுக்கிய விறகுக் குவியலை எரித்துத் தீர்த்துவிடும். அதுபோல பிறந்த பிறகு பெருக்கிய வினைகள் 'நமச்சிவாய' என்ற மந்திரத்தை ஓத நீங்கும் என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

சுவாமிகள்,

''வந்த நாள் தொட்டு இங்கு இழைத்துள்ள தீமை பெரு
மலைபோல் இருப்பினும் வெளி
மணி முன்னரே இமக்குலம் அழிதல் போல் அழிய''
(1.4. திருப்பழநிமலை, செ. 6)

இந்த மண்ணுலகில் பிறந்த நாள் முதல் இவ்விடத்தில் செய்துள்ள வினைகள் பெரிய மலை போல் இருந்தாலும்

வானத்திலுள்ள சூரியன் முன் பனிக்கூட்டம் கணத்தில் அழிவது போல் அழிந்துவிடும் என்கின்றார். (வெளிமணி - சூரியனைக் குறித்தது. இமக்குலம் – பனிக்கூட்டம்)

திருநாவுக்கரசர் தம் பழமொழித் திருமுறைப் பதிகத்தில் தாம் ஆரம்பத்தில் சமண சமயம் சார்ந்திருந்ததை நினைத்து வருந்தி, ''**கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வனேனே''** என்று வருந்திப் பாடியுள்ளார். (4:5:1)

சுவாமிகள், அதனை நினைவுகூர்ந்து, ''சிவனைத் தவிர்த்து வேறொரு தெய்வத்தை மகிழ்வோடு வணங்குதல் என்பது கனியிருப்பக் காயை விரும்புவதாகிய இழிசெயலை நிகர்க்கும் என உறுதிப்பாடுடைய இனிய ஞானயோகியர்கள் இனிதே உணர்கின்றனர். அத்தகைய ஞானியோகியரின் நிலையை அடியேன் எப்பொழுதும் பொருந்தி நிற்குமாறு அருள்பாலிப்பாயாக'' என்கின்றார்.

## திருநாவுக்கரசரின் பாடல் தொடர்களை மேற்கோள் காட்டுதல்

## பிரமம் பூரணத்தன்மையுடைய பொருள்

அருவம், உருவம், பெயர், முடி, நடு, கடை, குறி, நிறம் முதலியன அற்று ஞானமயமாக எங்கும் வியாபித்துள்ளது. பிரமம் என்ற கருத்துக்கு அரணாக, திருநாவுக்கரசர் பாடியருளிய ''மைப் படிந்த கண்ணாளும்'' என்று தொடங்கும் பாடலை மேற்கோளாகச் சுவாமிகள் காட்டுகின்றார். (5. திருப்பா, II. 57, கருணைத் தேவு, செ.1).

''மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானந்தான் வார்சடையான் என்னின் அல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஓரூரன் அல்லன் ஓருவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே
கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன்இறைவன்
என்று எழுதிக் காட்டொணாதே''
(6:97:10)

என்பது அப்பாடலாகும்.

## முழுமுதற்பொருளை அவனருளாலேயே உணரமுடியும்

அருவத்தினுடைய உண்மையை அறிவிக்கும் மூர்த்தியின் சகாயம் இல்லாமல் அருவம் இத்தன்மைத்து என ஆன்மா அறிவதில்லை என்பதற்கு,

''காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக்காலே''
(6:95:3)

''அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'' (6:97:10)

என்ற திருநாவுக்கரசரின் பாடலடிகளைச் சுவாமிகள் மேற்கோளாகக் காட்டுகின்றார் (பரிபூரணானந்த போதம், செ. 26 சிவசூரியப்பிரகாச உரை)

## ஆன்மாவிற்கு உண்மையான பெற்றோர் அம்மையப்பரே

''ஈன்றாரை விடல் ஆவதோ என்னில் ஈன்றாள்
நான் தான் எனச் சொல்ல நடு ஏதும் உண்டோ
சான்றான் அருள் மெய்த்த தாய் தந்தையாகும்
ஆன்றோர் அடைந்த பயன் அத்தனையும் ஓர்தி''

என்ற பாடலில் ஆன்மாவிற்கு அநாதிகாலந்தொட்டு உண்மையான பெற்றோராக விளங்குவது இறைவனே. ஈன்றெடுத்த பெற்றோர் அநாதியாக வந்த உறவல்ல என்பதை உணர்த்த சுவாமிகள்,

''தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரம் ஆர் தாந்தாம் ஆரே
வந்தவாறு எங்ஙனே போமாறு ஏதோ
மாயமாம் இதற்கேது மகிழவேண்டா''
(6:93:10)

என்ற திருநாவுக்கரசரின் பல வகைத் திருத்தாண்டகம் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார் (பரிபூரணானந்த போதம், துறவறவிளக்கப்படலம், செ.9 இன் உரை).

## பலபிரிவினரான சைவர்கட்கும் பசுபத சைவர்கட்கும் தனிமுதல் நாயகன் பரசிவமே

இக்கருத்தை உணர்த்த சுவாமிகள் மூவர் பாடல்களின்

தொடக்கச் செய்யுட்களை மேற்கோள்களாகக் காட்டுகின்றார். அதில் அவர் மேற்கோளாகத் திருநாவுக்கரசரின் ''காண்டலே கருத்தாய்'' என்று தொடங்கும் திருநாவுக்கரசரின் திருவாரூர்ப் பதிகத்தின் மூன்றாம் பாடலை மேற்கோளாகச் சுட்டுகின்றார். (3 திருப்பா II 89, பொன்னின்னான்மறை, செ. 6)

''அருமணித்தடம் பூண்முலை அரம்பையரொடு அருளிப் பாடியர்
உரிமையில் தொழுவார் உருத்திர பல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே'' (4:20:3)

என்பது அப்பாடல் ஆகும்.

## அருளாளர்கள் சிறு தெய்வங்களை வணங்கார்

சுவாமிகள் முருகப்பெருமானையே முழு முதற்கடவுளாக வழிபட்டவர். இந்து மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கச் சிறந்த வழி ஏக தெய்வ வழிபாடு. சிறு தெய்வ வழிபாடு செய்வோன் பரலோகம் அடையான். பல மூர்த்திகள் வழிபாடு முன்னேற்றத்திற்குத் தடை என்ற கொள்கையுடையவர். அவர் முருகப் பெருமானைப் போற்றும் திருப்பா முதல் புத்தகம் கடவுள் வணக்கப் பாடலுக்கு எழுதிய விரிவான திட்பம் உரையில் அருளாளர்கள் சிறு தெய்வங்களை வணங்கார் என்பதற்கு,

''சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்'' (6:98:5)

''இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாது ஒழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராது தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுத்தறியைக் காணலாமே''
(6:61:3)

என்று மறுமாற்றத் திருத்தாண்டகம் 5ஆம் பாடலையும், திருக்கன்றாப்பூர் - திருத்தாண்டகம் 3ஆம் பாடலையும் மேற்கோள்களாகக் காட்டுகின்றார்.

## திருவருள் ஆன்மாவிற்குள்ளேயே உள்ளது

சுவாமிகள் பரிபூரணானந்தபோதம், துறவறவிளக்கப் படலம் செ.86இல் திருவருள் ஆகாசம் போல் ஆன்மாவிற்குள்

நிலைத்துள்ளது. அதனைக் காண நீ வெளிமுகமாய் எவ்விடத்தும் செல்ல வேண்டாம் என்று குரு சீடனுக்கு அறிவுறுத்துவதுபோல் கூறுகின்றார்.

அப்பாடலின் உரையில்,

''தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொண்ணாத் தேவனை என்னுள்ளே தேடிக்
கண்டுகொண்டேன்''
(4:9:12)

என்ற திருநாவுக்கரசரின் திருஅங்கமாலைப் பதிகப் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## முழுமுதற்பொருளை நினையாது புண்ணிய நதிகளில் நீராடினால் பயன் இல்லை

''தூய நன்னீரிடைத் தோயினும்...
...
...
ஞானா காயம் அதைக் குறுகாவிடில் வறிதே''

என சுவாமிகள் தகராலய ரகசியம் முதலாம் காண்டம் செ. 38இல் கூறுகின்றார். அச்செய்யுள் உரையில்

''கோடி தீர்த்தம் கலந்து குளித்து அவை
ஆடினாலும் அரனுக்கு அன்பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்து ஆட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே''
(6:99:9)

என்ற திருநாவுக்கரசரின் பாவநாசத் திருக்குறுந்தொகைப் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## முழுமுதற்பொருளை நினையாது கற்கும் கல்வியால் பயன்இல்லை

''குற்றமற்ற பல நூல்களைத் திரிபின்றிக் கற்றாலும், கற்றதைப் பிறருக்குத் தெளிவாக ஓதும் திடம் பெற்றாலும், பல கவிதைகளை இயற்றும் ஆற்றல் எய்தினும், பிறவி நோய் தீர்க்கும் முருகப் பெருமானை வணங்காவிடில் அவை யாவும் பயனற்றவை,'' என

''கரிசறு நூல் பல கற்பினும் அதுபோல்
திரிபற ஓது திடம் பெறினும் கார்
சொரியுறை போல் கவி சொல்லினும் வெந்நோய்
அரிகுகனைப் பரவாவிடில் அவமே''

என்ற தகராலய ரகசியம் முதலாம் காண்டம் செ. 36இல் சுவாமிகள் கூறுகின்றார். அதன் உரை விளக்கத்தில்

''வேதம் ஓதில் என் வேள்விகள் செய்கில் என்
நீதிநூல் பல நித்தம் பயிற்றில் என்
ஓதி அங்கம் ஓராறு உணரில் என்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே''
(6:99:4)

என்ற திருநாவுக்கரசரின் பாவநாசத் திருக்குறுந்தொகைப் பாடலை மேற்கோளாகச் சுவாமிகள் காட்டுகின்றார்.

## சிவஞானக் கல்வியின் அவசியம்

''பின்னுவார் சடையான்'' எனத் தொடங்கும் திருவொற்றியூர்த் திருப்பதிகத்தில் திருநாவுக்கரசர், ஈசனின் புகழைக் கூறாதவர்கள் நரகத்தை அடைவர். தமக்குற்ற துன்பங்கள் தீர விரும்புவோர் ஆற்றல் மிக்க மறைகள் ஓதும் செயலை மேற்கொள்வர் எனக் கூறுதலின் துன்பத்துள் துன்பம் சிவஞானக் கல்வியைக் கல்லாதிருத்தலே'' என்று சுவாமிகள் கூறுவது (5. திருப்பா, II. 75 நிலத்தில் பன்மத சாத்திரம், செ. 5) சிவஞானக் கல்வியின் அவசியத்தை உணர்த்தும்.

சுவாமிகள் மேற்கோளாகக் காட்டியுள்ள திருநாவுக்கரசரின் பாடல் பின்வருமாறு :

''பின்னுவார் சடையான் தன்னைப் பிதற்றிலாப் பேதைமார்கள்
துன்னுவார் நரகம் தன்னில் தொல்வினை தீர வேண்டில்
மன்னுவான் மறைகள் ஓதி மனத்தினுள் விளக்கு ஒன்று ஏற்றி
உன்னுவார் உள்ளத்து உள்ளார் ஒற்றியூருடைய கோவே''
(4:45:8)

## சாதி வேற்றுமை பாராட்டக்கூடாது என அறிவுறுத்தல்

சுவாமிகளின் காலத்திலும் சாதி வேற்றுமை பார்ப்பது மிக்கிருந்தது போலும். அவர் திருப்பா முதற்புத்தகம் நூன்முகத்தில், ''இப்பரந்த உலகம், விவேகிகள் பலரையும் விரும்புவதை உணர்ந்த மேனாட்டார், அவ்வவ் வேறு மொழிகளில் வருவனவெல்லாம்

பெற்றுணர்ந்து பெரு மதிஞராகின்றனர். ஆனால் இத்தேயத்தார் அது விடுத்து,

''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிதீர்'' (5:60:3)

என்ற திருநாவுக்கரசரின் திருமாற்பேறு திருக்குறுந்தொகைப் பாடலை மேற்கோள் காட்டி சாதிச் சண்டையால் வாழ்நாள் ஒழிக்கும் குறுமதிஞராகின்றனர் என வருந்துகின்றார்.

## திருநாவுக்கரசர் பாடலின் நுட்பமான உண்மைப் பொருளை உணர்த்தல்

பிரமமே உயிர்களாகவும், உலகமாகவும் பரிணமிக்கின்றது என்று கூறும் சமய நூல்கள் உள. திருநாவுக்கரசரின் **''இருநிலனாய்''** எனத் தொடங்கும் நின்ற நெடுந்தாண்டகம் பாடல் அக்கருத்துக்குச் சாதகம் போல் மேலோட்டமாய்த் தெரியும். சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த பற்றுடைய சுவாமிகள் **அதன் நுட்பமான உண்மைப் பொருள் பிரமப்பொருள் சித்துப்பொருள், அசித்துப் பொருள் ஆகிய அனைத்திலும் வியாபித்து எங்கும் நிறைந்திருக்கும் என்பதையே புலப்படுத்துகின்றன என தெளிவுபடுத்துகின்றார்** (5. திருப்பா II 36 மாவிண், செ. 3). (இறைவன் எல்லாப் பொருட்களிலும் கலந்து வியாபித்துள்ள நிலையை உணர்த்துகின்றது.)

முழுமுதற்பொருள் 36 தத்துவங்களையும் கடந்தவன் என்பது சைவ சித்தாந்தம். ஆனால் திருநாவுக்கரசர் திருவாரூர்த் திருப்பதிகத்தில்,

''ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே''
(4:4:10)

என்று 25 தத்துவங்கட்கு அப்பாற்பட்டவன் இறைவன் என்கின்றார். சுவாமிகள் அதன் நுட்பப் பொருளைப் பரிபூரணானந்த போதம், துறவற விளக்கப் படலம், செ. 78இன் விளக்கவுரையில் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார். ''ஆன்ம தத்துவம் 24னும் மேம்பட்ட புருட தத்துவம் 25வது ஆகலின் அஃதே ''ஐயஞ்சு'' எனப்பட்டது. அப்புருடன் கலாதிபஞ்ச கஞ்சுகம் என்னும் கலை, நியதி, காலம், வித்தை, அராகம் ஆகிய ஐந்தும் ஒன்றுபட்டவிடத்தே தோன்றுவனாதலானும், அக்கலையின் காரணம் மாயை

ஆதலானும், புருடன் வாயிலாக வித்தியா தத்துவம் 7ம் கொள்ளப்பட்டன. இவற்றுக்கு மேலே உள்ள சிவதத்துவத்தில் இருப்போன் சிவபெருமானாகலின் அந்தப் பிரானே 'ஐயஞ்சின் அப்புறத்தான்' எனப்பட்டார். அத்தத்துவம் சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சக்தி (விந்து) என்பவற்றையும் தன் மாட்டு அடக்கிச் சிவதத்துவம் ஐந்து எனும்படி இருத்தலின் சுத்த மாயா தத்துவம் ஐந்தும் கொள்ளக் கிடக்கின்றன. இக்கிரமத்தின் அம்முப்பத்தாறுமே கூறப்பட்டன என்க'' என உணர்த்துகின்றார்.

## சொல்லாட்சி

### அல்லகண்டம் - துன்பம்

திருநாவுக்கரசர் திருவானைக்கா திருத்தாண்டகத்தில் அப்பெருமானின் திருவடியை அடையப்பெற்ற மகிழ்ச்சியால், இனி வேறோர் உறவும் வேண்டுவது இல்லை. துன்பத்திற்கும் அஞ்சேன் எனப் பொருள்பட பதிகப் பாடலிறுதிதோறும்,

''உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டு அடியேன் என் செய்கேனே''
(6:62-1-10)

என்று கூறுகின்றார். அல்லகண்டம் என்ற சொல் துன்பம் என்று பொருள்படும்.

சுவாமிகள் திருப்பா 2ஆம் புத்தகம், 70ஆம் பதிகம் ''மாணிக்கவாசகர்'' என்பதில் 5ஆம் செய்யுளில்,

''சோதனை மேல் எழில் சொன்னம் அது புனிதம்
ஆதல் உண்டே எனை அல்லகண்ட நிமிரும்
பேதமதால் பரீட்சிக்கினும் பிறகு அருள்
மோதமதாம் எனச் சூழ்வது என் முடிவே''

என்கின்றார். ''அழகிய பொன்னானது நெருப்பிலிடப்பட்டுப் புடம் செய்யப்படுமாயின், தூய்மையாய் மாற்றுயர்ந்து விடும். அதுபோலத் துன்பம் பெருகும்படிப் பேதகருமத்தினால் நீ என்னைப் பரிட்சிக்கினும், பின்பு திருவருள் ஆனந்தம் உண்டாம் என நின்னை விடாது தியானிப்பதூஉம் எனது சித்தாந்தமே'' என்பது பாடற் பொருளாகும். இப்பாடலில் ''அல்லகண்டம்'' என்ற சொல் துன்பம் என்ற பொருளில் வந்துள்ளது.

உ

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் பாடல்களில் சுந்தரரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும்



சுந்தரர் என்னும் சொல் அழகுடையவர் எனப் பொருள்படும். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நம்பியாரூரர். சுவாமிகள், **''முருகு கிளர் ஆரூரர்''** என சுந்தரரைப் போற்றுகின்றார். (1.8. திருவிராமேச்சுரம், செ. 8) **''அழகு விளங்கும் நம்பியாரூரர்''** என்பது அத்தொடரின் பொருளாகும்.

## சுந்தரரின் வரலாற்றுக் குறிப்புக்கள்

### கயிலையிலிருந்து பூவுலகிற்கு வந்தது

சேக்கிழார் பெரிய புராணத்தில் திருமலைச் சிறப்புப் பகுதியில் சுந்தரர் கயிலையிலிருந்து இப்பூவுலகிற்கு அவதாரம் செய்ததைப் பாடியுள்ளார். சுவாமிகள்,

**''அப்பருஞ் சுந்தரரும் அக்கயிலை நின்றிழிந்தே**
**இப்புடவி வந்து கண்டார் எம்மான் பரஞ்சோதீ''**
**(3. காசியாத்திரை, செ. 326)**

என்று சுந்தரர் கயிலையிலிருந்து பூவுலகிற்கு வந்ததைக் குறிப்பிடுகின்றார்.

### திருவடி தீக்கை பெற்றது

சுந்தரர் சித்த வடமடம் என்ற ஊரில் தங்கியிருந்த போது இறைவனிடம் திருவடி தீக்கை பெற்றதைப் பெரிய புராணம்

கூறுகின்றது. சுவாமிகளும்

**''சுந்தரத்தின் முடியில் அடிசூட்டி ஆட்கொண்டது போல்
என்றனுக்கும் சேவடிப்பூ இரண்டினையும் சூட்டாயோ''**

என்று (2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், கலியியல், செ. 27) கூறுகின்றார்.

## முதலையுண்ட பாலனை மீட்டது

சுந்தரர் திருப்புக்கொளியூர் அவிநாசியில் பல ஆண்டுகட்கு முன் முதலை வழங்கிய பிள்ளையைச் சிவபெருமான் அருளால் உரிய உடல் வளர்ச்சியோடு உயிர் பெற்று வரச் செய்தார் என்று பெரிய புராணம் கூறுகின்றது. சுவாமிகளும்,

''சுப சுந்தரர் நினைவுறு வண்ண முதலை தொல்லே
விழுங்கிய பிள்ளை தனைச்
சபரஞ்செய் உயிரோடு உமிழும்படிச் செய்தது''
(5. திருப்பா II. 19. நினைத்தாலென்
பிறப்பறுத்திடும், செ. 10)

ஆறுமுகச் சிவனின் அருள் வல்லமை எனக் குறிப்பிடுகின்றார்.

## களையா உடலோடு கயிலை சென்றது

சுந்தரர் தூல உடம்புடன் கயிலை சென்றதைப் பெரிய புராணம் வெள்ளானைச் சருக்கம் கூறுகின்றது. சுவாமிகள் தனக்கு எத்தகைய முக்தி வாய்க்குமோ என முருகப் பெருமானைப் பிரார்த்திக்கும் பாடலில் அருளாளர்கள் பலர் பெற்ற முக்தி வகைகளைக் குறிப்பிடுகின்றார். அதில் சுந்தரர் பெற்ற முக்தியை,

''எடுத்த தூலத்தொடு அருள் தான்
அடுத்து அமுதம் உற்றதற்கு ஆரூரர்''
(1.16. நிட்களானந்த குகன், செ. 6)

என்று சுந்தரர் தூல உடம்புடன் முக்தி பெற்றதைக் குறிப்பிடுகின்றார்.

மேலும் சுவாமிகள்,

''நய மேய பட்டினத்தார் போல ஞான இலிங்க உருச்
சுயமா அமைவதும் **சுந்தரர் சேரலன் தூலம் உடன்
கயிலாயம் சேர்ந்தது** போல் நனி சேர்வதும் காசில் அருள்
செயலாளர் சேர் முத்தி என்னலாம் ஓம் சிவதேசிகனே''

(1.43. கந்தர் நான்மணிமாலை, செ.14)

என்ற பாடலிலும் சுந்தரர் தூல உடம்புடன் கயிலாயம் சேர்ந்ததைக் குறிப்பிடுகின்றார்.

## பதிகப் பொருளமைப்பில் ஒப்புமை

சுந்தரர் அடியார் பெருமையைப் பாட இறைவன் ''தில்லை வாழந்தணர்'' என அடி எடுத்துக் கொடுக்க, அவர் திருத்தொண்டத் தொகை (7: பதிக எண், 39) பாடியருளினார். அதில் அவர் **''அடியார்க்கும் அடியேன்''** என்று பாடியது போன்று சுவாமிகள் **''அடியார்க்கு அடிமை நாம்''** என்ற பதிகம் (1.58 ஆம் பதிகம்) பாடியுள்ளார்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள நாயன்மார்கள் அனைவரையும் குறிப்பிட்டு அவர்கட்குத் தாம் அடிமை என்கின்றார். சுவாமிகளும் ''அடியார்க்கு அடிமை நாம்'' என்ற பதிகத்தில் பெரியபுராண நாயன்மார்களைப் போற்றுகின்றார்.

சுந்தரரின் பதிகம் அவருடைய அடியார் பக்தியை உணர்த்தும். சுவாமிகள் **''அண்ணலே நின்னடியார்க்கு அடிமையாதலே ஆசற்ற பூதிபூதி''** (5. திருப்பா II, 9. ஆனந்த நடன சிவம், செ. 7) என்று அடியவர்கட்கு அடிமையாதலே பெறற்கரிய செல்வத்துள் பெரும் செல்வம் என்று கூறுவது அவரது அடியார் பக்தியை உணர்த்தும்.

சுந்தரர் திருப்பாண்டிக் கொடுமுடி நமச்சிவாயத் திருப்பதிகம் (7:48ஆம் பதிகம்) பாடல் இறுதி தோறும் **''நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே''** என்று பாடியருளியது போல, சுவாமிகள் திருவலங்கல் திரட்டு, முதற்காண்டம் 9ஆம் பதிகமான திருச்சீரலைவாயில் பாடல் இறுதிதோறும், **''உனை மறக்கினு நா சாற்றிடும் சரவணபவவே''** எனப் பாடியுள்ளார்.

## பாடல் கருத்தொப்புமைகள்

சுந்தரர்,

''தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்

அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே'' (7:34:1)

என்று திருப்புகலூர்ப் பதிகத்தில், ''பொய்ம்மையாளரைப் பாராட்டாது திருப்புகலூர் இறைவனைப் புகழ்ந்து பாடினால் அவன் நமக்கு இம்மையிலே உணவும், உறையுளும் தந்து துன்பத்தை அகற்றி அம்மையிலே சிவலோகம் ஆள வைப்பான்'' என்று கூறுவது போல, சுவாமிகளும், ''பொருள் பெற இரும்பொய் பல பேசுவதைத் தவிர்த்து முருகப் பெருமானின் அருளைப் பெற பிரார்த்தியுங்கள்'' என,

**''பொருள் பெற என்று இரும்பொய் பலபேசிப் பொறி தணந்த**
**மருள் பிடித்து ஆடும் மடவார் தம் கேண்மை மறந்து நித்தம்**
**அருளை நினைத்து அவ் அருள் பெற வந்த அருள் முதல் நீ**
**வரும் வைகல் தான் அதிதூரம் கொலோ சிசிவாகனனே''**
(1:31. சிசிவாகனனே, செ. 2)

என்கின்றார்.

சுந்தரர்,

**''உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி''** (7:3:4)

என திருநெல்வாயில் அரத்துறைப் பதிகத்தில் கூறுகின்றார்.

சுவாமிகள்,

**''தூங்கி எழல்போலும் துஞ்சலும் உதிப்பும்''**
(4. ஞானவாக்கியம், 65)

என்று கூறுகின்றார்.

சுந்தரர் திருவாரூர்ப் பதிகத்தில்,

**''பின்னை என் பிழையைப் பொறுப்பானை''** (7:59:1)

என்று இறைவனைப் போற்றுகின்றார். சுவாமிகளும்,

**''பிழை பொறுக்க முறையீடு''** என ஒரு தனிப் பதிகம் (1:55) பாடியுள்ளார். அதில் பாடல் இறுதி தோறும்,

**''என் பிழை பொறுத்து ஆள்வது உன் கடனே''**

என முருகப்பெருமானிடம் முறையீடு செய்கின்றார்.

சுந்தரர்,

**''ஐவர் கொண்டு இங்கு ஆட்ட ஆடி
ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு
உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர்
ஓணகாந்தன் தளியுளீரே''** (7:5:1)

என்று இறைவனிடம் ஐம்புல ஆசைகளை அடக்கும்படிச் செய்து உய்வடைய அருளும்படி வேண்டுவது போல, சுவாமிகள்,

''பொறி மயங்காமல் ஐம்பொறியையும் ஒடுக்கி உள்
போக்கு அறிவது எக்காலமோ''
(1.27 உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம், செ. 56)

என்கின்றார்.

### பாடல் மேற்கோள் காட்டுதல்

### பல பிரிவான சைவர்கட்கும், பாசுபத சைவர்கட்கும் தனிமுதல் நாயகன் பரசிவம்

இக்கருத்தை உணர்த்த சுவாமிகள் மூவர் பாடல்களிலிருந்தும் சில தொடக்கச் செய்யுட்களை மேற்கோளாகக் காட்டுகின்றார். அதில் அவர், ''நண்ணியல்'' என்று தொடங்கும் நன்னிலத்துப் பெருங்கோயில் பதிகத்தின் ஒன்பதாம் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

(5. திருப்பா II 89. பொன்னினான்மறை, செ. 6)

### சிவபெருமானே முத்தொழிலும் ஐந்தொழிலும் செய்வன்

பரிபூரணானந்த போதம் செ. 49இன் உரை விளக்கத்தில் சுவாமிகள்,

''மூவராயும் இருவராயும் முதல்வன் அவனேயாம்
தேவர் கோயில் எதிர்கொள் பாடி என்பது அடைவோமே''
(7:7:3)

என்ற சுந்தரரின் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

### சிவாகமச் சிறப்பு உரைத்தல்

வேதம் சிவாகமங்கள் இரண்டுமே இறைவனின் திருவாக்குகள். ஆகமச் சிறப்பை உணர்த்த முற்பட்ட சுவாமிகள் தம் கருத்திற்கு அரணாக, சுந்தரரின் **திருக்கானப்பேரூர்ப் பதிகத்தின் 8ஆம்**

**பாடலையும், திருவாரூர் மண்தளிப் பதிகத்தின் 6வது பாடலையும், திருக்கயிலைப் பதிகத்தின் 8வது பாடலையும்** மேற்கோளாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

(5. திருப்பா, II 34. குருமணி, செ. 4)

**''தொண்டர் தமக்கு எளிய சோதியை வேதியனைத்**
**தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல் நஞ்சு**
**உண்அதனுக்கு இறவாது என்றும் இருந்தவனை**
**ஊழி படைத்தவனோடு ஒள்ளெரியும் உணரா**
**அண்டனை அண்டர் தமக்கு ஆகம நூல் மொழியும்**
**ஆதியை மேதகு சீரோதியை வானவர் தம்**
**கண்டனை அன்பொடு சென்று எய்துவது என்று கொலோ**
**கார்வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே''**

(7:84:8)

என்ற பாடல் சிவபெருமானே வேதத்தை ஓதுபவன், அத்தூய வேதத்தின் பொருளாய் உள்ள நீதி வடிவினன், தேவர்கட்கும் ஆகம நூல்களை அருளிச் செய்தவன் என்பதை உணர்த்துகின்றன.

**''அம்மானே ஆகம சீலர்க்கு அருள் நல்கும்**
**பெம்மானே''** (7:96:6)

என்ற திருவாரூர்ப் பரவையுண் மண்தெளிப் பதிகப் பாடல் அடி, ஆகமங்கள் கூறும் ஒழுக்க நெறியில் ஒழுகும் சீலர்கட்குச் சிவபெருமான் திருவருள் புரிகின்றான் என்ற கருத்தை உணர்த்துகின்றது.

**''அரவொலி ஆகமங்கள் அறிவார் அறிதோத்திரங்கள்**
**விரவிய வேத ஒலி விண்ணெலாம் வந்து எதிர்ந்திசைப்ப''**

(7:100:3)

என்பது திருக்கயிலைப் பதிகத்தின் (நொடித்தான் மலை) 8வது பாடல், களையா உடலோடு கயிலை சென்ற சுந்தரரை ஆகமங்கள் கூறி வரவேற்றதை உணர்த்துவதாகும்.

## அருளாளர்கள் சிறு தெய்வங்களை வணங்கார்

சமயாச்சாரியார்கள் நால்வருமே முழுமுதற் பொருளான சிவனையே போற்றி வழிபட்டவர்கள். அறுமுகச் சிவனைத் தவிர பிற சிறு தெய்வங்களைப் பாட விரும்பாத சுவாமிகள் தம் திருப்பா முதல் புத்தகம், கடவுள் வணக்கப் பாடலின் உரை விளக்கத்தில்,

**''மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே**
**அறிவே நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே''**
(7:24:1)

என்ற சுந்தரரின் திருமழபாடிப் பதிகப் பாடலடிகளையும்,

**''சிந்தா எந்தை பிரான் திருமேற்றளி உறையும்**
**எந்தா உன்னை அல்லால் இனி ஏத்த மாட்டேனே''**
(7:21:1)

என்ற கச்சித் திருமேற்றளிப் பதிகப் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## சிவன் விரும்பும் அர்ச்சனை பாட்டு

ஆரூரர் பாட்டில் நனி விருப்பன் சிவபெருமான். அவர் திருவெண்ணெய்நல்லூரில் இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பட்ட போது, இறைவன் அசரீரியாக ''நாம் விரும்பும் அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண் மேல் நம்மை சொற்றமிழ் பாடுக என்றார். (தடுத்தாட்கொண்ட புராணம், செ. 70). சுவாமிகள் இதனை சிவபெருமான் அன்புப் பெருக்குடன் கூடிய பெருமையும் உயர்ச்சியும் மிகுந்த அர்ச்சனை என்பது பாடும் பாட்டே'' என்று சங்கிலி நாச்சியாரின் கணவரான சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு உரைத்தருளினான்'' என்று கூறி, குகப் பரமனின் அருட்பெருமையை நாள்தோறும் அன்புடன் பாடி ஆடுக என்று நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முகமாக,

''கங்கையணி வேணி இறை காதலுடன் மாணார்
துங்கமலி அர்ச்சனை தொடுத்த கவி என்னாச்
சங்கிலி பதிக்கு அருள் செய்தான்அவண நெஞ்சே
பங்கமில் குகேசன் அருள் பாடி நிதம் ஆட்டமே''

என்கின்றார் (5. திருப்பா II, 23. கங்கையணி, செ. 1).

**பாம்பன் சுவாமிகள் அருளிய ''செவியறிவுறூஉ''**

*இறைவன் என்முன் வெளிப்பட்டு நின்றருளிய உறுதியுரையும், உபகாரமும் பல. என் பாடல் அவனால் அங்கீகரிக்கப்பட்டது பிரசித்தம்.*

*என்னை ஆதரித்தருள் பரமரகசிய சக்தி, என்னை நம்பினாரை ஆதரியாது நிற்குமோ? ஐயம் வேண்டாம்.*

*நீ பாராயணஞ் செய்கின்ற மகா மகிமையுடைச் சண்முக கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து அக்கதியிற் சேர்க்குமே.*

உ

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் பாடல்களில் மாணிக்கவாசகரின் வரலாற்றுக் குறிப்புக்களும் சிந்தனைகளும்



## மாணிக்கவாசகரைப் போற்றுதல்

சமயாச்சாரியார்கள் நால்வருள் மூவர் வரலாறே பெரிய புராணத்தில் சேக்கிழாரால் கூறப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் வரலாறு பெரிய புராணத்தில் கூறப்படவில்லை. சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிப்பிடாததால், அதை முதல் நூலாகக் கொண்டு விரி நூலாக அருளிச் செய்யப்பட்ட பெரிய புராணத்தில் அவர் வரலாறு குறிப்பிடப்படவில்லை என்பர். ''சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடாததன் காரணம் அவர் மாணிக்கவாசகரைச் சிவமாகவே பாவித்தார்'' என்று கிருபானந்தவாரியார் கூறுவார். சுவாமிகள் திருப்பா 2ஆம் புத்தகத்தில் 70ஆம் பதிகம் 'மாணிக்கவாசகர்' என்ற தலைப்பில் பாடியிருப்பது, வாரியாரின் கருத்துக்கு அரணாக அமைகின்றது. அதாவது சுவாமிகளும் மாணிக்கவாசகரை ஆறுமுகச் சிவனாகவே கருதிப் பாடியுள்ளார்.

## மாணிக்கவாசகரின் நூல்களைப் போற்றுதல்

மாணிக்கவாசகர் அருளிச் செய்த நூல்கள் திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். அவை திருமுறைத் தொகுப்பில் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன. இறைவனே அந்தணர்

வடிவில் வந்து தம் திருக்கரத்தால் அவைகளை எழுதி முடித்து, இறுதியில் **''திருவாதவூரன் சொல்லத் திருச்சிற்றம்பலம் உடையான் எழுதியது''** எனக் கைச்சாத்திட்டுக் கனகசபையில் மறைந்தருளினார் என வரலாறு கூறுகின்றது. சுவாமிகள்,

**''ஒரு சிவன் எழுதிய உயர் திருமுறை''** என மாணிக்கவாசகரின் திருமுறை நூல்களைப் (திருவாசகம், திருக்கோவையார்) போற்றுகின்றார் (2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 3. கலியியல், செ. 90).

## வரலாற்றுக் குறிப்புக்கள்

மாணிக்கவாசகரை இறைவன் திருப்பெருந்துறையில் குருவாக வந்து ஆட்கொண்டார். இதனை அவரே திருவாசகத்தில் பல இடங்களில் கூறியுள்ளார்.

''கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
(சிவபுராணம், அடி, 3)

''நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி''
(சிவபுராணம், அடி, 59)

''அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரனாகி
அருளிய பெருமையை'' (போற்றித் திருஅகவல், அடி 75-76)

என்பன இறைவனே குருவாக வந்து ஆட்கொண்டதற்கான அகச் சான்றுகளாகும்.

சுவாமிகள், ''அருட்சபையில் குஞ்சித பாதத்துடன் திருநடனம் செய்யும் இறைவனே மானுடத் திருமேனி தாங்கிப் பரிவுடன் இவ்வுலகில் எய்தும்'' என்ற கருத்தமைந்த தகராலய ரகசியம் இரண்டாம் காண்டம் செ. 24இன் உரையில் திருவாதவூரடிகட்கு (மாணிக்கவாசகருக்கு) குருவாக எழுந்தருளியதை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## ஞானவெளியில் பரமுக்தி பெற்றது

அருளாளர்கள் பலர் பெற்ற முக்தி வகைகளைக் குறிப்பிடும் சுவாமிகள்,

''ஞாலமிசை விழாமலே
ஞானவெளி உற்றதற்கு..... வாதவூர்
நாயனார் கரியாம்'' (1:16: நிட்களானந்த குகன், செ. 6)

என்றும் (கரி - சான்று),

''என் அக அடிகேள் இரும் பரவெளியை
மரீ இயதற்கு வாதவூர் முனியும்.... உளரே''
(1:46. கந்தர் நான்மணிமாலை, செ. 16)

என்றும் மாணிக்கவாசகர் ஞானவெளியில் பரமுக்தி பெற்றதைக் குறிப்பிடுகின்றார்.

### இருவரின் பண்பில் ஒப்புமை

### இருவரும் தங்களைத் தாழ்த்திக் கூறுதல்

இறைவனின் உயர்வையும், உயிர்களின் சிறுமையையும் உணரும் அருளாளர்கள் பலரும் தங்களைத் தாழ்த்தியே கூறுவர். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தன்னை ''நாயினேன்'' என்றும், ''நாயினும் கடையன்'' என்றும் பல இடங்களில் தாழ்த்திக் கூறுகின்றார். மாணிக்கவாசகர்,

''நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையினைச்''
(திருக்கோத்தும்பி, செ. 12)

என்று கூறுவது போல, சுவாமிகள், ''அருட்கடலானவனே! இன்பத் திரளாய் இருப்பவனே! செவ்வேள் பரமனே! சுடர் வண்ணனே! கிட்டுதற்கு அரிய பெருநிலையை நின் அடியவர்கட்கு வழங்கும் பேரருள் இந்த நாயேனுக்கும் இரங்குமானால் துன்பங்கள் அழிவுறும் ஞானநிலையில் மேம்பட்டவன் ஆவேன்'' என்று.

''எய்தரிய பரத்துவம் உன் அடியார்க்கு ஈயும்
இருங்கருணை இந்நாய்க்கு இரங்குமாயின்
எய்தரிய நிலை நின்று மேலோனாவேன்''

என்று கூறுகின்றார் (4. குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, செ. 9).

''அடியார் சிலர் உன் அருள் பெற்றார் ஆர்வம் கூர யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் மூக்கின்றேன்''
(பிரார்த்தனைப்பத்து, செ. 2)

என்று மாணிக்கவாசகர், ''அடியார்கள் சிலர் உன்னிடத்தில் அன்பு மிக உன்னுடைய அருளைப் பெற்றார்கள். நான் காலத்தை வீணே கழிக்கின்றேன்'' என்று அருளைப் பெற வழிபடாத மாந்தர்கள் இயல்பைத் தன்மேல் ஏற்றிக் கூறுகின்றார் (உண்மையில் அவர் இறைவனை இமைப்பொழுதும் தன் நெஞ்சில் மறவாதவர்).

‘‘சுவாமிகள் குருவின் உபதேசப்படி நடந்த ஞானியரெல்லாம் உனது திருவருட்பேற்றை அடைந்தனர். நானோ இழிவான உலகியல் விஷயங்களில் ஆட்பட்டு அழிந்தேன். எனினும் அடியேன் விரும்பியவண்ணம் என்னோடு கலந்து அருள்செய்’’ என முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றார்.

‘‘ஞான் நூற் பொருளினைக் கிரகித்து
அந்நெறி நூல் விடுத்து ஆரியன் உரைப்படி
அனுதினம் சாதனை புரிந்து உன்
இன்னருள் அடைந்தனர் அறிஞர் எல்லாரும் இங்கு
இழிநசை சூழ்ந்து கெட்டேன் நான்
முன்னிய வணம் இனி முயங்கி நல்லருள் செய் என்
முழுமுதற் திருவருட்கடலே’’
(5. திருப்பா II. 16. திருவருட்கடல், செ. 2)

என்கின்றார்.

மாணிக்கவாசகர்,

‘‘நானேயோ தவம் செய்தேன் சிவாய நம என பெற்றேன்‘‘
தேனாய் இன்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்’’
(திருவேசறவு, செ.10)

தேனாய் இன்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து அடியேனின் உள்ளம் புகுந்து அருள் செய்ததனால், சிவாயநம என்ற சூக்கும பஞ்சாக்கரத்தைச் சொல்லும் பேறு பெற்றேன். இப்பேற்றைப் பெறுவதற்கு முற்பிறவியில் நான் தவம் செய்தேனோ என்று கூறுவதற்கு ஒப்பாக,

சுவாமிகள்,

‘‘இன்று சரவணப வாயநம என நாவே
அன்று என் செய்தாயோ அறம்’’
(2. திருவலங்கல் திரட்டு, 2ஆம் கண்டம்,
1. வெள்ளியியல், 96)

‘‘எனது நாவே! இன்று சரவணப வாய நம எனும் திருமந்திரத்தைச் செபிக்க, முற்பிறவியில் எத்தகைய புண்ணிய செயல்களைச் செய்தாயோ’’ என்கின்றார்.

மாணிக்கவாசகர்,

''வேண்டேன் செல்வம், வேண்டேன் மண்ணும்''
(உயிருண்ணிப்பத்து, செ.7)

என்று கூறுவது போல, சுவாமிகள்,

''காசு பதி கருதேன்''
(2. திருவலங்கல் திரட்டு II, பல்சந்தப்பரிமளம், செ. 34)

என செல்வத்தையோ, நிலத்தையோ கருதமாட்டேன் (விரும்ப மாட்டேன்) என்கின்றார். (காசு – செல்வம், பதி – நிலம்).

## பாடல் கருத்து ஒப்புமைகள்

## இறையருளைப் பெறுவதற்கான வழி

மாணிக்கவாசகர்,

''ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வது ஒன்று அறியேனே''
(திருச்சதகம், செ. 31)

என்ற மாணிக்கவாசகரின் பாடல் கருத்துடன்

''ஆடுகிலை அன்பது இலை ஆளிறையை நாடிப்
பாடுகிலை என்று உரிய பண்ணவன் அறைந்த
பீடுடைய நல்லுரை பிடித்து மனனே மா
வீடு தரு சாமியை விதந்து கவி பாடே''
(5. திருப்பா II. 23. கங்கையணிவேணி, செ. 2)

என்ற சுவாமிகளின் பாடல் ஒப்புநோக்கத்தக்கது. பாடற் பொருள் வெளிப்படை. உயிர் இறையருளைப் பெற அவனைப் போற்றி ஆடி, பாடி, உள்ளம் உருக வழிபடவேண்டும் என்பது பொதுக் கருத்து.

## இறை உலகைக் கடந்து நிற்கும் நிலை

மாணிக்கவாசகர்,

‘‘கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணி முடி சொல்லின் சொல் இறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தம் இலான் வரக் கூவாய்’’
(குயில் பத்து, செ. 1)

என்கின்றார்.
சுவாமிகள் இதனை,

‘‘திருவாதவூரடிகள் சொற்றவாறு அடி சிரசு
செப்பொணா ஞான விண்ணாய்ச்
செறி நினக்கு அடி வினவில் ஏழ் பாதலங்களும்
செல்லான நிலையில் எனவாம்
பொருளாரு முடி வினவில் உரை இறந்திடமேய
புலமாகும் நிலையில் எனவாம்’’
(5. திருப்பா II. 5. பரமபதி, செ. 1)

என்று கூறுகின்றார்.

## உவமை ஒப்புமை (புலன் வயப்படுவதால் அடையும் துன்பம்)

மாணிக்கவாசகர் மனிதர்கள் புலன்வயப்பட்டுத் துன்புறுதலுக்கு நீத்தல் விண்ணப்பத்தில் பல உவமைகள் கூறுகின்றார். அவற்றுள் ஒன்று நாங்கூழ்ப் புழுவை எறும்பு அரித்தல்.

‘‘எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டு அலந்த
வெறுந் தமியேனை விடுதி கண்டாய் வெய்ய கூற்று ஒடுங்க
உறுங்கடிப் போதவையே உணர் உற்றவர் உம்பரும்பர்
பெறும் பதமே அடியார் பெயராத பெருமையனே’’
(திருச்சதகம், செ. 25)

நாங்கூழ்ப்புழு எறும்பு இல்லாத மெல்லிய தசைத் திரளாலான உடலுடையது. இஃது எறும்பின் நடுவில் அகப்பட்டால் எறும்புகள் அதனைச் சல்லடைக் கண்ணாக அரித்துத் தின்றுவிடும். அதுபோல மனிதர்களை ஐம்புலன்களின் ஆசை அரித்து அழித்துவிடும். அவ்வாறு துன்பம் அடையும்படித் தன்னை விட்டுவிடாமல் இறைவன் காத்து அருள்புரிய வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார்.

சுவாமிகளும் மாணிக்கவாசகரை அடியொற்றி முருகப்பெருமானை நோக்கி, ''நீ திருவருள் செய்வாயேல் இவ்வுலகில் என்னோடு போர்புரியும் இந்திரியங்களாகிய கருவிகள் என்னும் எறும்புகள் மொய்த்து அரிக்க அதனால் வருந்துகின்ற நாங்கூழ்ப் புழுவாக இருக்கும் எளியவன் அறியாமை நீங்கி உன்னுள் கலந்து உய்தி பெறும் செல்வமாகிய 'அசி' பத மோட்சத்தை அடைவேன். கருணைப் பிரானே! நீ அருள் கூர்ந்து அடியேனுக்கு அருள்புரிவாயாக என்று விண்ணப்பிக்கின்றார். (4. கந்தரொலியலந்தாதி, செ. 19)

''யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்''
(திருச்சதகம், செ. 90)

''நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்''
(திருச்சதகம், செ. 11)

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறுவது போன்று, சுவாமிகள்,

''உன்னய அருளை ஈஈ உயர்பதம் ஈஈ என்று
சொன்ன சொல் அனைத்தும் போலி தொழுததும் போலி
அன்பாம்
அன்னையை நாடி நாடி அழுததும் போலி என்றே
பன்னும் இப்பாவி எய்தும் பயன் எதோ பகர் வேல் நாதா''

(4. குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, செ. 13)

வேல் ஏந்திய இறைவனே! உன்னுடைய நலமார்ந்த அருளை வழங்கியருள் வழங்கியருள். மேம்பட்ட வீடுபேறு வழங்கியருள் வழங்கியருள் என்று நான் செய்த விண்ணப்பம் அனைத்தும் நடிப்பே. உன்னை வழிபட்டதும் நடிப்பே. அருளை நாடி நாடி அழுததும் நடிப்பே என்று கூறும் இப்பாவி பெறவுள்ள பயன் தான் யாதோ? அறிகிலேன் கூறியருள்க என்கின்றார்.

## அடியார் நடுவுள் இருக்க வேண்டுதல்

மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

''......................அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்
பொன்னம்பலத்தெம்

முடியா முதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே''
(கோயில் மூத்த திருப்பதிகம், செ. 1)

''என் எண்ணம் நிறைவேறும்படி அடியேனாகிய நான்
உன் அடியார் நடுவுள் இருக்கும்படி அருள்புரிவாய்''

என்று சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றார்.

மாணிக்கவாசகரை அடியொற்றிச் சுவாமிகள்,

''கூறரிய திருவருள் பாங்காகவே எனது
கொள்கை நனி பெருக அடியார்
ஈட்ட நடுவே இருந்து உய்ய ஒரு சித்தமும்
இருக்க அருள் புரிய வேண்டும்
ஏகற்ற பரம நிட்டானுபவ அருளாளர்
இன்பப் பிரவாக சிவமே''

(5. திருப்பா II. 7. இன்பப்பிரவாக சிவம், செ. 4)

''விளக்கிக் கூறுவதற்கரிய நின் திருவருள் மயமாகவே எனது எண்ணக் குறிப்பு நன்கு முழுமையாக நிறைவேறவும் அடியார் நடுவுள் இருந்து உய்திபெற ஒரு தெய்வீக எண்ணம் எனக்கு வாய்க்கவும் அருள் புரிவாயாக'' என்று அறுமுகச்சிவனைப் பிரார்த்திக்கின்றார்.

''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே''
(பிடித்த பத்து, செ.9)

என்கின்றார் மாணிக்கவாசகர்.

சுவாமிகள்,

''...................உண்டி
மட்டுப் படுத்தி உறல்வே
ஈட்டும் அடியார் சங்கம் அதில் நான் இருக்கவும் ஓர்
எண்ணம் அருள் புரிய வேண்டும்.''
(5. திருப்பா II 7. இன்பப் பிரவாகசிவம், செ. 7)

''உண்டியை மட்டுப்படுத்தி ஞானவேட்கையைப் பெருக்கிக்

கொள்வார்களே உன் அடியார்களாவர். இத்தகைய அடியார் கூட்டத்துள் நான் சேர்ந்திருக்கும் எண்ணம் பெற நீ திருவுள்ளம் கொள்வாயாக'' என்று கூறுவது முற்கூறிய திருவாசகப் பாடலடிச் சொற்றொடர் கருத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது.

மாணிக்கவாசகர் **'ஊனினை உருக்கி'** என்பது போல சுவாமிகள் **'உண்டியை மட்டுப்படுத்தி'** என்கின்றார். மாணிக்கவாசகர் **'உள்ளொளி பெருக்கி'** என்பது போல சுவாமிகள் **''ஞானவேட்கையைப் பெருக்கி''** என்கின்றார்.

## இறைவன் செய்யும் நடனங்கள்

இறைவன் செய்யும் நடனங்களை ஊன நாடகம், ஞான நாடகம் என இருவகைப்படுத்தி மாணிக்க வாசகர் கூறுகின்றார். நடனம் என்பது இறைவன் செய்யும் ஐந்தொழில்களை உணர்த்தும். உயிர்களின் பெத்த நிலையில் செய்வது ஊனை நாடகம் என்றும், பக்குவமுற்று ஞானம் எய்திய நிலையில் செய்வது ஞான நாடகம் என்றும் கூறுவர். மேலும் ஊன் என்பது உடல் எனப் பொருள் கொண்டு, உடலை உயிருடன் கூட்டி வினைக்கயிற்றால் பிணித்துப் புண்ணிய பாவங்கட்கேற்ப ஆட்டுவித்தல் ஊனைநாடகம், இது உயிர்கள் பரிபாகம் அடையும் பொருட்டு செய்யப்படுவது. ஊன நடனத்திற்பட்ட உயிர்கள் படிப்படியே அறிவு முதிர்ச்சி பெற்றுத் தம்மையும், தலைவனையும் உணரும் பக்குவம் எய்தும், அப்படிப்பட்ட உயிர்கட்கு ஞானத்தைத் தந்து மலம் மாயை கன்மங்களை நீக்கி இன்பப் பேற்றை வழங்குவது ஞான நடனம் என்பர்.

சுவாமிகள்,

''இகழ் பாவம் என்ற வினையதனால் விலங்ககம் எனவே
தயங்கு உயிர்களும்
புகழ் சீலம் என்ற வினை அதனால் உயர்ந்துள
விபுதராய் இலங்கு உயிர்களும்
தொகையாம் இரண்டும் விரவிய கூவின் மைந்தரும் ஓர்
சுகமேவ என்று இரு நடம்
பகமாயிடும் கடவுள் என நான் நினைந்து தொழு பதியே
குகப் பரமமே''

( 5. திருப்பா II, 12 குகப்பிரமம், செ. 7)

தீவினைப் பயனால் விளங்கும் விலங்கு மரம் முதலிய உயிர்க்

கூட்டங்களும், நல்வினைப்பயனால் விளங்கும் தேவகணங்களும், நிலவுலகிலுள்ள மானிடங்களும் ஆனந்த நிலையை அடைய வேண்டி ஊனநடம், ஞானநடம் என்ற இரு நடனங்களையும் செய்யும் கடவுள் குகப்பிரமம் என்று கூறுவது முற்கூறிய திருவாசகப் பாடிலடிகளின் விளக்கத்துடன் ஒப்புநோக்கத்தக்கது.

திருப்பா 2ஆம் புத்தகத்தில் 64ம் பதிகம் தேரிலூர் என்பதில் 7ஆம் செய்யுளில் வரும் 'ஆட்டுக்காரன்' 'மாட்டுக்காரன்' என்ற தொடருக்கு, முனைவர் சபாரத்தினம் அவர்கள் ஊனக்கூத்து, ஞானக்கூத்து நிகழ்த்துபவன் இறை என பொருள் கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. (ஆட்டுக்காரன் - வினைக்கேற்ப உயிர்களை ஆட்டுவிப்பவன் (ஊனக்கூத்து), வீட்டுக்காரன் - பக்குவமுற்ற உயிர்கட்குச் சிவப்பேரின்பம் கொடுப்பவன் (ஞானக்கூத்து).

## இறையியல்புகள்

### இறைவன் ஒருவன்

''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' (திருவண்டப்பகுதி, வரி, 43) என்று மாணிக்கவாசகர் இறைவன் ஒருவனே என்கின்றார்.

சுவாமிகள்,

''ஒருவன் என்னும் எம்மான்'' (1.71. தேர்ந்தேனே என் கண்ணி, 96) இறைவன் ஒருவன் என்கின்றார். ஒருவன் என்ற சொல் பதிப்பொருள் ஒன்றே என்பதை உணர்த்துவதோடு, அவன் ஒப்பற்றவன் என்ற பொருளையும் தரும்.

### மனம் வாக்கிற்கு எட்டாதவன்

மாணிக்கவாசகர் இறைவனை,

''சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க''
(திருவண்டப்பகுதி, வரி 40-41)

என்றும்,

''உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி''
(போற்றித் திருஅகவல், வரி.124)

என்றும் போற்றுகின்றார்.

சுவாமிகள்,

''ஆத்தர் சொல்லானும் எ(ண்)ணும் மனத்தானும்
அளக்க ஒண்ணாப்
பூர்த்தி எனப்படும் வானவன்'' (1.30. சிகிவாகனன், செ.4)
என்பதாலும்,

''நாவால் மனத்தால் அளப்படும் கந்த''
(1.33. கந்தர் இரட்டைமணிமாலை, செ. 16)

என்பதாலும் இறைவன், சொல்லாலும், நினைக்கும் மனத்தாலும் அளவிட முடியாத பூரணம் எனப்படும் தேவன் எனப் போற்றுகின்றார்.

## ஒன்றாகிய இறைவனே பல பெயர்களால் அழைக்கப்படல்

''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.''
(திருத்தெள்ளேணம், செ.1)

இறைவன் தனக்கென ஒரு குறிப்பிட்ட நாமம், உருவம், தொழில் முதலியன இல்லாதவன் (இதனைச் சொரூப லக்கணம் - சிறப்பியல்பு என்பர்). உயிர்கள் பொருட்டு அருள் காரணமாகப் பலவகைத் திருமேனிகளையும், பெயர்களையும் தாங்கி தொழில்களைச் செய்வன் (இது தடத்தலக்கணம் - பொது இயல்பு) **''பல பல வேடமாகும் பரன்''** என்பார் ஞானசம்பந்தர். ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத ஒப்பற்ற முதல்வனை ஆயிரம் திருநாமங்கள் கூறி வழிபடுவதற்குப் பக்தியே காரணம் எனலாம்.

சுவாமிகள்,

''ஓருருவம் ஓர் பெயரும் இலி என்று ஓதும் எம்
உடையானாய் ஒளிர் சுப்பிரமணியன் எல்லாப்
பாருயுரும் ஆள்பொருட்டே அவை எண்ணொண்ணாப்
பல தாங்கி நிற்கின்றான்''

(2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம்,
2வது ஆசிரியவியல், செ. 110)

ஒரு வடிவேனும் ஒரு பெயரேனும் இல்லாதவன் எனக் கூறப்படுபவனாய் எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் தலைவனாய் ஒளிரும் சுப்பிரமணியப் பெருமான் அனைத்து உலகங்களையும், அனைத்து உயிர்களையும் ஆள்வதற்காகவே எண்ணற்ற

வடிவங்களையும், எண்ணற்ற பெயர்களையும் தாங்கி நிற்கின்றான் என்று கூறுவது முற்கூறிய திருவாசகப் பாடலடிகளின் கருத்துடன் ஒப்பிட்டுச் சிந்திக்கத் தக்கது.

## மாணிக்கவாசகரின் திருவாசகத் தொடர்களை மேற்கோள்களாகக் காட்டுதல்

### பரம்பொருள் - சிவனின் முதன்மை

சுவாமிகள் திருப்பா முதல் புத்தகம் கடவுள் வணக்கச் செய்யுள் உரையில்,

‘‘தேவர்கோ அறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை
மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்து எந்தை’’
(திருச்சதகம், செ.30)

என்ற மாணிக்கவாசகர் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

உலகப்பற்றை விட்டு மெய்ப்பொருள் நாட்டத்திற்குச் செல்லும் வழியில் ஏற்படும் இடையூறுகளை மாணிக்கவாசகர் போற்றித் திருஅகவலில் ( வரி 43-58) தொகுத்துக் கூறுகின்றார். அதில் அவர்,

‘‘மிண்டிய மாயாவாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆர்த்து’’ (வரி 54-55)

என்று மாயாவாதம் பற்றிக் கூறுகின்றார்.

சுவாமிகள் இதனை,

‘‘மாணிக்கவாசகர் போற்றி சொல் அகவலில்
கோணிற்கு மாயையின் வாதியைக் குறைகுயின்
றாணட்பு மார்க்கம் இஃதாம் எனக் காட்டிய
மாணத் தெள்ளாறெற்கும் வாய்த்தது உன்னருளே’’
(5.திருப்பா II, 70. மாணிக்கவாசகர். செ.1)

என்ற பாடலில் ‘‘மாணிக்கவாசகர் தாம் அருளிய போற்றித் திருஅகவலில் மாயாவாதியின் குற்றநெறியை எடுத்துக்காட்டி, சேமம் மிக்க அன்பு நெறி இதுவே (சைவம்) என்று உணர்த்தியருளிய மாட்சிமை பொருந்திய தெளிவான நெறி எளியேனும் மேற்கொள்ள வாய்த்திருப்பது உனது திருவருட்பயனே

ஆகும் என்கின்றார்.

''சைவ சித்தாந்தம் ஒன்றே என் கருத்துக்கு இசைந்த நெறி'' என்றும்,

''சைவ சித்தாந்த நூல்கள் மரபாய் விளக்கு நெறி
தெளிவே மயக்கு அன்று''
(1.8. திருவிராமேச்சுரம், செ.7)

என்றும் சுவாமிகள் கூறுவன இங்கு நினைவு கூரத்தக்கன.

## அருளாளர்கள் முழுமுதற்பொருளான சிவனைத் தவிர பிற தெய்வங்களை வணங்கார்.

சுவாமிகள் திருப்பா முதற்புத்தகம் கடவுள் வணக்கச் செய்யுள் உரையில்

'கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே'
(திருச்சதகம், செ. 2)

என்ற மாணிக்கவாசகர் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

(பிற்காலத்தில் தோன்றிய சைவ சித்தாந்த நூல்களுள் சிவஞானசித்தியார் சுபக்கம்

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்'' (செ. 115)

என்று கூறுவதை நினைவில் கொண்டால் சமய நல்லிணக்கத்திற்கு பிற தெய்வங்களைச் சிவமாகக் கருதி வழிபடலாம் எனலாம்.)

## இறைவனை அனுபவிக்கும் பேரின்பம்

உயிர்கள் இறைவனை உணர்ந்து அனுபவிக்கும் பொழுது அவன் தரும் பேரின்பமே எல்லாவற்றிலும் மேலான பரமானந்தம் ஆகும். திருவாசகத்தில், **''பந்தம் பறியப் பரிமேற் கொண்டான் தந்த அந்தமிலா ஆனந்தம் பாடுதும் காண் அம்மானாய்''** (திருவம்மானை, செ. 2) என்பதை மேற்கோள் காட்டி, அத்தகைய பிரமானந்தத்தை அனுபவிக்கப் போதிக்கும் நூலாதலின், இந்நூலுக்குப் பரிபூரணானந்தபோதம் எனப் பெயரிட்டதாகச் சுவாமிகள் கூறுகின்றார். (பரிபூரணானந்த போதம், பாயிரம்)

## முருகன் குமரன்

முருகவேள் குமரன் என்று அழைக்கப்படுவதற்கு **''குமரன் தன் தாதைக்கு உந்தீபற''** என்ற திருவாசகத் தொடரைச் சுவாமிகள் மேற்கோள் காட்டுகின்றார். (செ. 13இன் உரை)

## அமலநிட்டை விளக்கம்

அமலநிட்டை விழிப்பு, உறக்கம் என்ற இரண்டிற்கும் மத்தியில் பிரகாசிக்கும். இந்நிட்டை நான், எனது என்பன வேகப்பெற்று ஏறுவாரிடத்து உள்ளது என்பதற்கு,

''எனை நான் என்பது அறியேன் பகல்
இரவாவதும் அறிவேன்
மனவாசகம் கடந்தான் எனை
மத்தோன் மத்தனாக்கினான்''

(உயிருண்ணிப்பத்து, செ. 3)

என்பதை மேற்கோள் காட்டுகின்றார் (பரிபூரணானந்த போதம், துறவற விளக்கப் படலம், செ. 88இன் உரை) மேலும் முற்கூறிய திருவாசகத் தொடரில் எனது (எனை) நான் என்பன முறையே உடம்பென்றும், உயிரென்றும் குறித்து, அவற்றில் பற்று ஒழிதலே பரமானந்த சாகரம் என்று கூறி, அதற்கு அரணாக,

''பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று யாதுமின்றி அறுதலே''

(பிரார்த்தனைப்பத்து, செ. 5)

என்ற திருவாசகப் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## திருவாசகப் பாடலடிக்கு நுட்பமாகப் பொருள் கூறுதல்

''கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே''
(திருப்படையாட்சி, செ. 1)

என்ற திருவாசகப் பாடலடிக்குப் பொருள் உண்மை அறியாது மயங்குவர் சிலர். 'ஆகாதே' என்பதை இங்கு 'ஆகும்' எனப் பொருள் கொள்ள வேண்டும் என்பர் சிலர். (ஏனெனில் ''கண்ணினை நின் திருப்பாத போதுக்கு ஆக்கி'' என்று மாணிக்கவாசகரே திருச்சதகம் செ. 26இல் கூறியுள்ளாரே). சுவாமிகள் முற்கூறிய பாடலடிக்குப் பொருள் நுட்பம் உணர்த்துகின்றார். **காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்னும் திரிபுடிஞானம் சிவம் பெருக்கும்**

**அனுபூதியில் அச்சிவமாய் நிற்பார்க்கு இல்லை என்பதையே அவ்வடி விளக்கிற்று** என்று சுவாமிகள் கூறுகிறார். (பரிபூரணானந்தபோதம், பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 111இன் உரை).

திருவாசகத்தில் ''இன்றெனக்கருளி'' என்று தொடங்கும் கோயில் திருப்பதிகம் செ. 7இல் உள்ள, **''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்''** என்ற தொடருக்கு ''எல்லாப் பொருள்களையும் சிறிது சிறிதாக விட்டுச் சென்ற உயிர் முடிவில் இறைவனை அடையும்'' என்று ஜி. வரதராஜன் பொருள் கூறுகின்றார். தண்டபாணி தேசிகர், ''எல்லாப் பொருள்களையும் சிறிது சிறிதாக கடந்து நீங்கி நின்ற ஆன்ம அறிவு சென்று சென்று அணு அணுவாகத் தேய்ந்து தேய்ந்து முடிவில் பரிபூரண ஏகமாகி நிற்கும்'' என்கின்றார்.

சுவாமிகள் கூறும் விளக்கம் பின்வருமாறு. தூல தேகத்தோடு கூடி நின்ற ஆன்மா உள்ளுறை சூக்கும உடம்பு, காரண உடம்பு முதலியவற்றை எய்தி, அங்கு ஆணவ மலத்தில் கட்டுண்ட தனது அணுத்தன்மை நீங்கிற்று என்பதை அறிந்தவாறு, ஆணவ இருள் அதன் காரணமாக எழும் கன்மம் முதலியன தேய்ந்து தேய்ந்து பரம்பொருளை எய்தும். மூவகை உடம்பும் மாயா காரியம் ஆதலின் இவ்வாறு மும்மலமும் கடந்து வீடுபேறடையும் என்கின்றார். 'ஒன்றாம்' என்ற சொல் ஒரு பொருள் தன்மையுறும் (சிவமாந்தன்மை உறும்) என்பதையும், ''ஒன்றெனப்படுவது வீடு பெறலே'' என்று பிங்கல நிகண்டு கூறும் நெறிப்படி வீடுபேறடையும் என்பதையும் உணர்த்தும் என்கின்றார் (3. பரிபூரணானந்த போதம், பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 23இன் உரை). உயிர் வீடு பேறடையும்போது சிவமாந்தன்மை பெறும் என்பது சித்தாந்தம். சுவாமிகள் சித்தாந்த நெறியினின்றும் பிறழாதே நுட்பப் பொருள் உணர்த்துகின்றார்.

பரம்பொருள் தொழிலாற்றுவதை லீலை என்று வேதமார்க்கி கூறுவர். திருவாசகத்தில் **''காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி''** (திருவெம்பாவை, செ. 12) என்ற பாடலடியில் விளையாடி என்றதை லீலை என எண்ண நேரிடும். அதற்குச் சுவாமிகள் ''விளையாட்டு'' என்றது இறைவன் சங்கற்ப மாத்திரத்தில் எளிதில் தொழிலாற்றுவதை உணர்த்தும் என்கின்றார் (3. பரிபூரணானந்த போதம், பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 38இன் உரை)

திருவாசகத்தில் கோயில் மூத்த திருப்பதிகம் 8ஆம் பாடலில் **''தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தே போனால் சிரியாரோ?''** என்ற தொடருக்கு ''அடியார் கூட்டத்தைச் சாராது வாழ்நாளை வீணாளாகக் கழித்து இறந்தால் உலகத்தார் சிரிக்க மாட்டார்களோ'' எனப் பொதுவாக பொருள் கூறுவர். வினைப்பலன்களை அனுபவிக்க இறைவனால் தூலஉடம்பு கொடுக்கப்பட்ட உயிர்கள், வினைப்பலன்கள் அனுபவித்து முடிந்ததும் தூலஉடம்பு நீங்கிவிடும். உன்னருள் பெற்ற அடியேன் அவ்வாறு உலகத்தார் ஒப்பச் சாவதாயின் உலகோர் சிரியாரோ. யான் பிறவாநெறி, மண்மேல் உடம்பு விழாமல் பெற அருள் புரிய வேண்டும் என்ற நோக்கில் விண்ணப்பித்ததாக கூறுகின்றார். அதற்கு அரணாக **''மண்மேல் யாக்கை விழுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும் அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால அழகுடைத்தே''** என்பதை மேற்கோளாகக் காட்டுகின்றார். (குழைத்தபத்து. செ. 9) (5.திருப்பா II உரை 2000 ஆம் ஆண்டுப் பதிப்பு, ப. 775)

மண்மேல் யாக்கை விழல் - தூல உடம்பை மண்ணில் நீத்தல்

வந்துன் கழற்கே புகுதல் - தூல உடம்பை நீக்காது இறைவன் திருவடியில் கலத்தல்.

**மாணிக்கவாசகர் தில்லையில் ஞானவெளியில் கலந்த வரலாறே சுவாமிகளின் இவ்விளக்கத்திற்கு அடிப்படை எனலாம்.**

(சுவாமிகளின் காலத்தில் எழுப்பப்பட்ட வாதத்திற்குச் சுவாமிகள் கூறிய விளக்கம் என்பர்.)

## சொல்லாட்சி

பரிபூரணானந்த போதம் பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம் செ.1இல் வரும், ''ஊத்தை உருமவிந்த உயிர்'' என்ற தொடரில் வரும் ஊத்தை என்ற சொல் புலால் அழுக்கினை உணர்த்தும் என்று கூறி, அதற்கு அரணாக,

''யோகமே ஊத்தையேன் தனக்கு'' (பிடித்தபத்து, செ. 1) என்ற அடியை மேற்கோளாகச் சுவாமிகள் காட்டுகின்றார். இங்கு ''ஊத்தை'' என்பது அழுக்கு உடம்பு எனப் பொருள்படும்.

## முடிவுகள் :

இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுள் சில இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன.

1. பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ மெய்ஞ்ஞானி

2. சுவாமிகள் ஐம்முகச் சிவனும், ஆறுமுகச் சிவனும் ஒன்றே என்று உணர்ந்திருந்தபோதிலும், ஆறுமுகச் சிவனையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு ஏக தெய்வ வழிபாட்டில் நின்றவர்.

3. ஆறுமுகச்சிவனின் திருவுருவக் காட்சியும், அவரின் ஞானோபதேசமும் கிடைக்கும் பேறு பெற்றவர்.

4. அறுமுகச் சிவனைப் போற்றிச் சுவாமிகள் அருளிச் செய்த பாடல்கள் 6666. அவரே அவற்றை ஆறு மண்டலங்களாகத் தொகுத்துள்ளார்.

5. மூன்றாம் மண்டலத் தொகுப்பிலுள்ள பரிபூரணானந்த போதம் என்ற நூலுக்குச் சிவசூரியப் பிரகாசம் என்னும் உரையும், தகராலய ரகசியம் என்ற நூலுக்கு சதானந்த சாகரம் என்ற உரையும், ஐந்தாம் மண்டலத் தொகுப்பிலுள்ள திருவருட்பா நூலுக்குத் திட்பம் என்னும் குறிப்புரையும் சுவாமிகளே அருளிச் செய்துள்ளார்.

6. சைவ சித்தாந்தத்திற்குரிய அடிப்படைக் கருவூலங்களுள் ஒன்று சைவத் திருமுறைகள்.

7. சுவாமிகள் சைவத் திருமுறைகளில் ஆழ்ந்த புலமை உடையவர்.

8. சைவத் திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளை திருஞானசம்பந்தரும், நான்கு ஐந்து ஆறு திருமுறைகளைத் திருநாவுக்கரசரும், ஏழாம் திருமுறையை சுந்தரரும். எட்டாம் திருமுறையை மாணிக்கவாசகரும் அருளியுள்ளனர்.

9. இவர்கள் நால்வரும் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடியுள்ளனர்.

10. இந்நால்வரும் சைவ சமயாசாரியர்கள் எனப் போற்றப்படுவர்.

11. இவர்கள் காலத்திற்குப் பின் அருளப்பட்ட சைவ சமய நூல்களில் அவற்றின் அருளாளர்கள் நால்வருக்கும் குரு வணக்கம் பாடியுள்ளனர்.

12. முன்னோடிகளான அருளாளர்களை அடியொற்றிச் சுவாமிகள் சைவ சமயாசாரியர்கள் நால்வரையும் போற்றியுள்ளார்.

13. சுவாமிகளின் பதிகப் பாடல்கள் சிலவற்றில் நால்வர் வரலாறு பற்றிய குறிப்புகள் உள்ளன.

14. அவற்றுள் திருஞானசம்பந்தர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களே அதிகம் உள்ளன.

15. அபர சுப்பிரமணியர்களுள் ஒருவரே திருஞான சம்பந்தராக அவதரித்துள்ளார் எனச் சுவாமிகள் கருதுவதால், அறுமுகக் கடவுளை வழிபடும் அவர் திருஞானசம்பந்தரின் வரலாற்றுக் குறிப்புக்களை அதிகம் கூறியுள்ளார் எனலாம்.

16. சுவாமிகள் திருப்பா முதற்புத்தகம், 4ஆம் பதிகமான பரிபூரணானந்த போதம் நூலின் முதற்செய்யுள் உரை விளக்கத்தில், அவர் காலத்தில் வாழ்ந்த வைணவர்களுள் சிலர் சம்பந்தரைக் குறை கூறியதற்கு மறுப்பாக சம்பந்தரின் பெருமையை உணர்த்தும் விதத்தில் சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறியுள்ள படிச் சம்பந்தரின் வரலாற்றை முழுமையாக எடுத்துரைத்துள்ளார். இது சுவாமிகட்குத் திருஞானசம்பந்தர் மீதுள்ள பக்தியைக் காட்டும்.

17. சுவாமிகள் மாணிக்க வாசகரைச் சிவமாகவே கருதிப் போற்றியுள்ளார்.

18. நால்வர் பால் பக்தி கொண்ட சுவாமிகள் அவர்கள் அருளிய சில பதிகப் பொருளமைப்பை ஒத்து, தாம் சில பதிகங்கள் இயற்றியுள்ளார்.

19. நால்வர் பாடல்கள் சிலவற்றின் கருத்துக்கும், சுவாமிகளின் பாடல்கள் சிலவற்றின் கருத்துக்கும் ஒப்புமை உள.

20. சுவாமிகளின் பதிகப் பாடல்கள் சிலவற்றுள்ளும், உரை நூல்களிலும் சுவாமிகள் தாம் கூறும் கருத்திற்கு அரணாக நால்வர் வாக்குகளை (பாடல்கள் அல்லது பாடலடிகளை) மேற்கோள்களாக காட்டியுள்ளார்.

21. பொதுவாக யாப்பிலக்கணம் அறிந்து செய்யுள் இயற்றுவதே கடினம். சுவாமிகளோ திருப்பா இரண்டாம் புத்தகத்தில் சில பதிகப் பாடல்களில் தாம் கூறும் கருத்திற்கு அரணாக நால்வர் அருளிச் செய்த பதிகப் பெயர்களையும், பாடல் எண்களையும் சுட்டிப் பாடியுள்ளார்.

22. சுவாமிகள் சில பாடல்களிலும், உரைநூல்களிலும் தாம் கூறும் கருத்திற்கு அரணாக நால்வரின் பாடல்களையோ, பாடலடிகளையோ மேற்கோள்களாகக் காட்டியுள்ளார்.

23. நால்வர் பாடலடிகள் சிலவற்றுக்குச் சுவாமிகள் சித்தாந்த நெறி பிறழாது நுட்பப் பொருள் உணர்த்தியுள்ளார்.

24. சொல்லாட்சியிலும் ஓரிரு இடங்களில் நால்வர் பாடல்களில் அப்பொருள் பயக்கும் அருஞ்சொற்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

25. சுருங்கக் கூறின் இந்நூல் சுவாமிகட்கு நால்வர் பாலுள்ள பக்தியையும், அவர்களது பாடல்களை அனுபவித்து ஓதி உணர்ந்த ஆழ்ந்த புலமையையும் காட்டும்.

26. சுவாமிகள் நால்வர் வாக்குகளை வேதாந்த சித்தாந்த சமரசத் தன்மை எனப் போற்றுகின்றார்.

27. அவை வேதத்தின் ஞானகாண்டப் பொருளை சிவ ஆகமத்திற்கும், உபநிடதங்கட்கும் மாறுபடா வண்ணம் அறிவித்தலின் அவ்வாறு கூறுகின்றார் எனலாம்.

❊ ❊ ❊ ❊ ❊